விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 08 திங்கட்கிழமை (23.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரச ஆதரவில் புதிய புலிகள்?

## உருவாகக் கூடும் என்கிறார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தின் ஆதரவில் புதிதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கப்படக் கூடுமென வட மாகாண சபை முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற சர்வோதய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது பாதுகாப்பு தொடர்பில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கடந்த கால தமிழ் அரசியல் தலைவர்கள் எதிர்நோக்கிய நிலைமையை எதிர்நோக்க நேரிடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலி கமாண்டர் ஒருவரின் தலைமையில் புலிகள் இயக்கம் மீள இயங்கவுள்ளதாகவும் அரசாங்கம் அதற்கு ஆதரவளிக்க உள்ளதாகவும் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன இதனை நானும் அறிந்து வைத்துள்ளேன்.

யுத்த நிறைவின் பின்னர் 20 ம் பக்கம் பார்க்க

## புலியை தேசியக் கொடியில் வைத்து பகல்கனவு காண்கிறார் விக்னேஸ்வரன்!

### சிங்கள நாளேடு விமர்சிப்பு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் தற்பொழுது வடக்கில் பகல் கனவு காணும் ஒரே நபர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் என திவயின தெரிவித்துள்ளது.

சிங்கள ஊடகமான திவயின நாளேடு வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முதலமைச்சராக பதவியேற்கும் முன் விக்னேஸ்வரன் பல கனவுகளை கண்டாலும் முதலமைச்சரான பின் அவர் காணும் கனவுகள் அலங்காரமானவை.

விக்னேஸ்வரனின் புதிய கனவு வடக்கு மாகாணத்தில் இருந்து தேசியக் கொடியை நீக்குவது. வடக்கில் நடைபெறும் எந்த அரச நிகழ்வுகளிலும் தேசியக் கொடியை 19 ம் பக்கம் பார்க்க

## தொடர் பட்ஜெட் தோல்விகள் இணக்க முயற்சியில் கூட்டமைப்பு

இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளிலும் இம்முறை வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகள் தோற்கடிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால், தமது கட்சி உறுப்பினர்களிடையே இணக்கம் ஏற்படுத்தும் முயற்சியில் அக்கட்சித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.


வடக்கு-கிழக்குக்கு வெளியே, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்தில் உள்ள 19 ம் பக்கம் பார்க்க

## தமிழ் இனப்படுகொலைக்கு பிரணாப் முகர்ஜி உடந்தை

### ஆதாரத்துடன் நிரூபிப்பேன் என வைகோ சூளுரை



இந்திய அமைச்சரவையில் பணியாற்றிய போது பிராணப் முகர்ஜி, தமிழ் இனத்துக்குச் செய்த துரோகத்தையும், இனப்படுகொலையில் உடந்தையாக ஈடுபட்ட குற்றத்தையும், குன்றின் உச்சி மீது நின்று பகிரங்கமாக அசைக்க முடியாத ஆதாரங்களுடன் குற்றம்சாட்டுவேன



என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய ஜனாதிபதியை அவர் அந்தப் பதவியில் இருக்கும் போது, அவர் குறித்த விமர்சனங்கள் 19 ம் பக்கம் பார்க்க

மிகப் பிந்திய வரவு
கனடாவில் படிக்க உழைக்க ஒரு மாதத்தில் பறக்கலாம்
3 பேருக்கு மாத்திரமே இவ் அரியவாய்ப்பு
முடிவுத் திகதி : 26.12.2013
முக்கிய குறிப்பு : இவை சம்மந்தமான சட்ட ஆவணங்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com
(C-5969)

## இந்தியாவிடமிருந்து எண்ணெய் குதங்களை மீளப் பெற இலங்கை முனைப்பு

(கொழும்பு)
இலங்கையில் இயங்கி வரும் இந்திய எண்ணெய் வள நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் சேகரிப்புக் குதங்களை மீளப்பெற்றுக் கொள்வதற் 19 ம் பக்கம் பார்க்க



சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விருந்துபசாரமொன்று சபாநாயக்கரின் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் ஜனாதிபதியுடன் த.தே.கூ. தலைவர் இரா.சம்பந்தன், பா. உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் அளவளாவுவதைப் படத்தில் காணலாம்.

## பச்சிளம் குழந்தை குழியில் புதைப்பு

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் தெற்கு உரும்பிராய் பகுதியில் கைவிடப்பட்ட பற்றைக்காணியில் பச்சிளம் குழந்தையொன்று புதைக்கப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை குழந்தை புதைக்கப்பட்ட பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் 20 ம் பக்கம் பார்க்க

சுந்தர்சன் நிறுவனத்தின்
மாபெரும் மலிவு விற்பனையில்
பரிசு வென்ற 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - Abans Double Door Fridge திரு. த. அகிலன் - சாவற்கட்டு
2 ஆம் பரிசு - LG Washing Machine திரு. ஜெ. றொஹான் - சாவகச்சேரி
3 ஆம் பரிசு - Microwave Oven திரு. ந. பிருந்தன் - கோண்டாவில்

4 - 10 ஆம் பரிசில்கள் - Mixture Grinder
ற. சதீஸ்குமார் - மல்லாகம்/ச. லோகநாதன் - கோண்டாவில்/அ. குணமணி - அச்சுவேலி/ஜெ. விதுஷன் - கைதடி/த. பரஞ்சோதி - முள்ளியவளை/கே. சுரேஸ்குமார் - மாதகல்/பா. சண்முகம் - புத்தூர்

11 - 20 ஆம் பரிசில்கள் - Pedestal Fan
வே. லெபொன்ஜெயதாஸ் - மாதகல்/சி. நஜிதா - சுன்னாகம்/ஏ.பியூலா - நவாலி/வீ.சுரேந்திரன் - கே.கே.ஸ் வீதி/ஏ.நிறஞ்சன் - யாழ்ப்பாணம்/க.செல்வகுமாரன் - கோப்பாய்/லெ.ஜெனுஷ்கா - மாதகல்/எஸ்.சிவரூபன் - சங்கானை/எம்.விஜேந்ரா - திருநெல்வேலி/தியுன்சியஸ் - மன்னார்

21 - 30 ஆம் பரிசில்கள் - Mobile Phone
சு.நந்தகுமார் - ஜெயபுரம்/சோ.ஜங்கரன் - புலோலி/ஆர்.றாதிகா - யாழ்ப்பாணம்/எஸ்.றஜீவன் - கொழும்புத்துறை/சு.கைத்தாம்பிள்ளை - பண்டத்தரிப்பு/வி.காந்தரூபன் - கரவெட்டி/வி.அபிராமன் - இணுவில்/ரி.சோபனா - வல்வெட்டித்துறை/வி.அக்க்ஷயமரகதன் - யாழ்ப்பாணம்/பி.குமரேந்திரன் - சுன்னாகம்

31 - 40 ஆம் பரிசில்கள் - Toaster
ஏ.எம்.றிசானி - மானிப்பாய்/வி.சாத்விகா - சுதுமலை/ம.ஜானகி - யாழ்ப்பாணம்/எம்.பிரைட்மன் - பாசையூா/ரி.புனிதவதி - குப்பிளான்/தயாகரன் - கோண்டாவில்/எஸ்.ஜெலனி - சாவகச்சேரி/எஸ்.றஜீவன் - கொழும்புத்துறை/மூ.லிங்கேஸ்வரன் - சுதுமலை/எஸ்.ஜெயரட்ணம் - சுழிபுரம்

41 - 50 ஆம் பரிசில்கள் - Iron
வித்தியாகௌரி - மானிப்பாய்/ப.விஜயலட்சுமி - மானிப்பாய்/எஸ்.கஸ்தூரன் - மானிப்பாய்/பி.பரமேஸ்வரி - காரைநகர்/பே.சடாசிவம் - கொக்குவில்/பி.ஏ.றாஜ்குமார் - மானிப்பாய்/றா.கலைச்செல்வி - கொக்குவில்/எஸ்.விஜயகுமாரி - வட்டுக்கோட்டை/து.சுகந்தன் - மாதகல்/எஸ்.சுபாங்கி - இணுவில்

(C-5960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முற்றுகிறது மீனவர் பிரச்சினை

## ஆயிரக்கணக்கான மீனவர்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு

இலங்கைத் தரப்பால் தாங்கள் எதிர்நோக்கும் இன்னல்களைக் கண்டித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

நாகபட்டினம் மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 64 கிராமத்து மக்களும் அங்குள்ள பஞ்சாயத்து அமைப்புகளும் இணைந்து இந்த வேலைநிறுத்தம் மற்றும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக போராட்டக் குழுவைச் சேர்ந்த மோகன்தாஸ் தெரிவித்தார்.

இலங்கையின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள தமது 70 படகுகள், மற்றும் சிறையில் இருக்கும் சுமார் 200 மீனவர்கள் விடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை மற்றும் தஞ்சைப் பகுதி மீனவர்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தொடர் உண்ணாவிரதத்தில் சுமார் 3 ஆயிரம் பேரும், ஆதரவு தெரிவிக்கும் வகையில் 10 ஆயிரம் பேரும இதில் பங்குபெறுவதாக மோகன் தாஸ் கூறுகிறார்

இந்தியா-இலங்கை இடையே மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தீர்வில்லாமல் இழுத்துக் கொண்டே செல்கிறன என்றும், இதற்கு முடிவுகாண இந்திய அரசு போதிய முயற்சிகளை எடுக்கவில்லை என்றும் மீனவர்கள் தரப்பு குற்றஞ்சாட்டுகிறது.

இதனிடையே இப்பிரச்சினை குறித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் குழுவினர் இன்று திங்கட்கிழமை தமிழக முதல்வரை சந்திக்கவுள்ளதாகவும், அதன் பிறகே போராட்டம்குறித்த அடுத்தகட்ட முடிவுகள்எடுக்கப்படும்எனவும்மோகன்தாஸ்தெரிவித்தார்.

இதனிடையே இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, இந்திய விவசாய அமைச்சர் ஷரத் பவாரை சந்திக்க புதுடில்லி செல்ல வுளளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-4)



# ஈழத்திற்கு உயிர் கொடுக்க கூட்டமைப்பு தயாராகிறது

## தே.சு.முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் தேசியக் கொடியை ஏற்ற போவதில்லை என தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈழத்திற்கு அல்லாமல் வேறு எதற்கு தயாராகி வருவது என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் ஈழத்திற்கு உயிர் கொடுக்க தயாராகி வருகிறார்.

நாட்டுக்கு எதிரான பிரதான சர்வதேச துஷ்ட சக்தியான சனல் 4 தொலைக்காட்சியை போன்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் அதற்கு சிறந்த உதவிகளை வழங்கி வருகிறார்.

வடக்கில் தேசியக் கொடியை ஏற்றுவதை தடை செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில மக்கள் பிரதிநிதிகள் முயற்சித்து வருகின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநரை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். இவற்றை எல்லாம் செய்யும் இவர்கள் ஈழத்திற்கே அன்றி வேறு எதற்கு தயாராகி வருகின்றனர்?

நாட்டின் மீது இடி விழுந்தாலும் பரவாயில்லை நினைத்துக் கொண்டு வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து அதிகாரத்தை கைப்பற்றும் ஆசையில் இருக்கும் நபர்களே இப்படியான வேலைகளை செய்கினறனர் என்றார் ஜயந்த சமரவீர. (செ-4)

# துப்பாக்கித் தொழிற்சாலை கண்டுபிடிப்பு ; ஒருவர் கைது

(கொழும்பு)

பதுளை, எட்டம்பிட்டி - நெலுவ பிரதேசத்தில் வீடொன்றில் இயங்கி வநத துப்பாக்கி தொழிற்சாலை கண்டுப்பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளபபட்ட தேடுதலில் குறித்த வீட்டில் இருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்தும் 25 வெற்றுத் தோட்டக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தச்சு தொழிலாளிஎனவும்அவருக்கு இரும்பு பொருத்தும் தொழிலிலும் சிறந்த அனுபவம் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-4)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இரு கிராமங்களுக்கு மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இரு கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைகேணி, முள்ளியான் ஆகிய இரு கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இவ் மின்வழங்கல் ஆரம்ப நிகழ்வு இன்றைய தினம் இரு கிராமங்களின் கிராம அபிவிருத்தி சங்க தலைவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கின் வசந்தத்தின் கீழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வெற்றிலைக்கேணி கிராமத்துக்கு 2 கோடியே 62 இலட்சம் ரூபாயும் முள்ளியான் கிராமத்திற்கு ஒரு கோடியே 34 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருந்தன.

இந் நிலையிலேயே குறித்த இரு கிராமங்களும் இன்றைய தினம் மின் ஒளி பெறுகின்றன.

இவ் மின் வழங்கல் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்புத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரினும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் பொறியியலாளர் எஸ்.குணசீலன். வடமராட்சி கிழக்கு பிரதேச சபை தலைவர் எஸ்.திரிலிங்கநாதன், யாழ்.மாவட்ட மின்பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன், பருத்தித்துறை மின் அத்தியட்சகர், எஸ்.இராஜேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐ.சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கையினை அடுதது இவ் மின்விநியோகம் இடம்பெறவுள்ளதோடு இதன் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு, நாகர்கோவில் மேற்கு. கிழக்கு ஆகிய கிராமங்களுக்கும் வடக்கின் வசந்தத்தின் கீழ் மின் வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (செ-4)

# சிறைச்சாலை பாதுகாப்பிற்காக நவீன தொழில்நுட்ப கருவிகள்

## சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் செயற்படுத்தப்படும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை மேலும் வலுப்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெலிக்கடை, மகசீன், பெண்கள் சிறை மற்றும் புதிய சிறைச்சாலையில் இந்த வேலைத்திட்டத்தை முதலில் செயற்படுத்த திணைக்களம் தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இதனடிப்படையில் இன்றைய தினம் முதல் சிறைச்சாலை நுழைவு கதவுகளுக்கு 4 அதிநவீன தொழில்நுட்பத்திலான கருவிகள் பொருத்தப்பட உள்ளன.

எதிர்காலத்தில் நாட்டில் உள்ள ஏனைய சிறைச்சாலைகளிலும் இந்த கருவிகள் பொருத்தப்பட உள்ளன எனவும் அவர் கூறினார்.

அதேவேளை ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ நேற்று கொழும்பு பெண்கள் சிறைக்கு விஜயம் செய்து பெண் கைதிகளின் நலன குறித்து விசாரித்து அறிந்து கொணடார்.

தாய்மாருடன் சிறையில் இருக்கும் பிள்ளைகள் தொடர்பில் அவர் கூடிய கவனம் செலுத்தியுள்ளார். 5 வயதுக்கும் குறைந்த 14 பிள்ளைகள் தமது தாய்மாருடன் சிறையில் இருந்து வருகின்றன.

இந்த பிள்ளைகளுக்கும் சாதாரண கைதிகளுக்கு வழங்கப்படும் உணவே வழங்கப்படுவதால், எதிர் காலத்தில் தனது அனுசரணையில் பிள்ளைகளுக்கு தனியாக உணவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் பாரியார் கூறியுள்ளார். (செ-4)

# விபத்தால் தீப்பற்றியது மோட்டார் சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் அதிலொன்று தீப்பிடித்து பற்றியெரிந்த சம்பவம் ஒன்று இடம பெறறுள்ளது. இவ் விபத்துச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் உரும்பிராய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய் நோக்கிவந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிளும் உரும்பிராய் சந்தியிலுள்ள கடையொன்றிலிருந்து திரும்பிய மோட்டார் சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு மோதியுள்ளன.

இதில் உரும்பிராய் சந்தியிலிருந்து திரும்பிய மோட்டார் சைக்கிளே தீப்பற்றி எரிந்துள்ளது.

இம் மோட்டார் சைக்கிளினை செலுத்திவந்த சிறிதரன் (வயது 61) எனும் இரு பிள்ளைகளின் குடும்பஸ்தர் சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பரவிய தீயினை அயலவர்களின் உதவியுடன அணைத்ததோடு விபத்து தொடர்பான விசாரணைகளினை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)





மனத் தளர்வா?
தனிமையா?
தற்கொலை எண்ணமா?
உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.
(C-5832)
கைகொடுக்கும் நண்பர்கள்
021 222 8117

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவில் அருகில் 15 3/4 பரப்புக் காணியுடன் 100 தென்னை மரங்கள், 3 வாகனம் விடும் செற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0773253610
(5117)

## பெயர் மாற்றம்

உடையார்கட்டு கிழக்கு, உடையார் கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைதீவு எனும் நிரந்தர முகவரியைக் கொண்ட வீரசிங்கம் சசி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை வீரசிங்கம் தர்சினி என மாற்றம் செய்துள்ளேன்.

இனி வரும் காலங்களில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து ஆவணங்களிலும் வீரசிங்கம் தர்சினி என்றே ஒப்பம் இடுவேன் என்பதனை இத்தால் அறியத் தருகிறேன். இப்படிக்கு வீ.தர்சினி (5130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ராணி இருந்தார்.

ராஜாவினுடைய அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கமாக இருந்தது. வருகிற ஞானிகள் கூறும் உபதேசங்களையெல்லாம் அந்த ராணி அவதானமாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அதனுடைய விளைவு, அவளும் ஒரு ஞானி ஆகிவிட்டாள். ஞானி மட்டுமல்ல...தன்னுடைய உருவத்தை மாற்றிவிட்டு ஆகாயத்திலே பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைக்கப் பெற்றது. நினைத்தால் ராணி எங்கேயும் பறந்து உலா வரலாம் - அப்படிப்பட்ட சித்தி அவளிடம் வந்து விட்டது.

உடனே ராஜா - ராணியிடம் சென்று ''இதோ பார்! நானும் உன்னை மாதிரியே ஞானி ஆக வேண்டும். எனக்கும் ஏதாவது உபதேசம் செய் " என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராணி, "நீங்கள் ஞானி ஆக வேண்டுமென்றால் அனைத்தையும் துறந்து, தயாராக ஒரு நிலைப்பட வேண்டும். உங்களைவிட்டு வைராக்கியம் இன்றும் போகவில்லை" என்று கூறினாள்.

"சரி" என்று அமைதியாக ராஜா இருந்து விட்டார்.

நாட்கள் நகர்ந்தன; ராஜா காட்டுக்குப்போய் தவம் செய்ய வேண்டுமென ஆசைப்பட்டார். ஆனால், ராணிக்கு விருப்பமில்லை. அதனால் அவர் சம்மதப்படவில்லை.

ராஜாவுக்கா வழி தெரியாது? அவர் சொல்லாமல் ஒரு நாள் இரவு காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

ஆகாயத்திலே பறக்கிற சித்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்த படியால் இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார்.

புறப்பட்டுப் பறந்து போனாள் காட்டுக்கு... ராஜா இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டாள்.

நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினாள் இந்த இளம் முனிவர். அதுதான் அந்த ராணி.

ராஜா இந்த இளம் முனிவரைப் பார்த்ததும் தலை வணங்கினார்.

"நான் நீண்ட காலமாக தவம் செய்கிறேன். மன நிம்மதி எனக்கு இன்னும் கிட்டவில்லை. தாங்கள்தான் அருள் புரியு வேண்டும் " என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர்; ''அனைத்தையும் துறக்க வேண்டுமென்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பின்னர் அனைத்தையும் விட்டு விட்ீர்களா?" என்று கேட்டார்.

''அனைத்தையும் விட்டு விட்டேன். இன்னும் இந்த ஆசிரமத்தைத்தான் விடவில்லை" என்று சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப் போனார்.

இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார். "உடம்பு உங்களுக்குச் சொந்தம் இல்லை... அதெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு சொந்தம்" என்றார்.

ராஜா சிறிது நேரம் யோசித்தார். "அப்படியென்றால், எனக்கு என்னதான் சொந்தம்?" என்று கேட்டார்.

"உங்கள் அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் உங்களிடம் இருந்து துறக்க வேண்டியது அதைத்தான். அதைவிட்டு விடுங்கள் முதலிலே. அது உங்களிடம் இருப்பதால்தான் இந்த உலகமே உங்களிடம் இருக்கிறதாக நினைக்கிறீர்கள். அகங்காரம் இருக்கிறதால்தான் இந்த உலகப் பொருட்கள் உங்களுக்குச் சொந்தமென்று தோன்றுகிறது" என்று இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி கூறினார்.

உடனே ராஜா "இதோ என்னிடம் இருக்கிற அகங்காரத்தை விட்டு விடுகிறேன்" என்றார்.

அதன்பின்தான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்கு கிடைத்த மாதிரியான சித்தி அவருக்கும் கிடைக்கப் பெற்றது.

இந்தக் கதையை ஒருவருக்கு மிகவும் உணர்வு பூர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் உடனே சொன்னார்;

சித்தியடைவதற்கு அந்த ராஜா எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார்.

நான்கூட சித்தி அடைந்திருக்கிறேன். ஆனால், அவ்வளவு கஷ்டப்படவில்லை. "உங்களுக்கு சுலபமாக சித்தி கிடைக்கப்பெற யார் காரணம்?" என்றுகேட்டார்.

"எங்கள் அப்பாதான் காரணம். அவர் இரண்டாவதாக ஒரு கல்யாணம் செய்தார். உடனே சித்தி வீட்டுக்கு வந்து விட்டார். எனக்கு சித்தி கிடைத்த கதை இது தான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கைச் சிறைகளில் 323 வெளிநாட்டவர்கள்

(கொழும்பு)

இலங்கைச் சிறைகளில் தற்போது 323 வெளிநாட்டவரகள் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில்306ஆண கைதிகளும் 17 பெண் கைதிகளும் உள்ளடங்குவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் கே.எம்.ஜி.பி.குலதுங்க தெரிவித்துள்ளார்.

306 ஆண் கைதிகளில் உகண்டா, மாலைதீவு, லிபேரியா, சிரியா, ஜேர்மன், ஜோர்தான், மாலி ஆகிய நாடுகளைச சேர்ந்த தலா ஒரு கைதியும், நேபாளம், ஆப்கான், துருக்கி ஆகிய நாடுகளைச்சேர்ந்த தலா இரண்டு கைதிகளும், ஈரான், சீனா, பிலிப்பைன்ஸ்ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா மூன்று கைதிகளும், நான்கு இஸ்ரேலியர்கள், நான்கு உக்ரேனியர்கள், ஐந்து பங்களாதேசத்தவர்கள், எட்டு நைஜீரியர்கள், 43 பாகிஸ்தானியர்கள் மற்றும் 220 இந்தியர்கள் உள்ளடங்குவதாகவும்இலங்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 306 வெளிநாட்டு ஆண் கைதிகளில், ஒருவருக்கு மரணதண்டனைககான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், நான்கு பேர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இருவர் அரச சொத்திற்கு சேதம் விளைவித்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் இருவர் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறுவர் மீறல் தொடர்பாகக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

மேலும் ஐவர் போதைப் பொருள் வைத்திருந்ததாகவும மேலும் எட்டுப் பேர் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்ட நடைமுறைகளை மீறியதாகவும், 12 பேர் மோசடிகள் செய்ததாகவும் 33 பேர் தீர்ப்பளிக்கப்பட்டும் 39 பேர் மிகவும் ஆபத்தான போதைப் பொருட்களை வைத்திருந்த சந்தேகத்தின் பேரிலும் குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர்.

இவர்களில் 200 இந்திய மீனவர்களும் உள்ளனர்.

இதேபோன்று தற்போது இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 வெளிநாட்டு பெண் கைதிகளுள் சீனா, உக்ரேன், உகண்டா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச சேர்ந்த தலா ஒருவரும், இரண்டு இந்தியர்கள் மற்றும் ஒன்பது பாகிஸ்தானியர்களும் உள்ளடங்குவர். இவர்களில் ஒருவர் கொள்ளைச் சம்பவத்துடனும், இன்னொருவர் சிறுவர் மீறல் தொடர்பிலும், மற்றொருவர் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறியதாகவும், இருவர் கொலைக் குற்றம் சாட்டப்பட்டும், நான்கு பேர் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டும், போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் எட்டுப் பேர் தடுத்து வைக்கப் பட்டும் உள்ளனர்.

தற்போது தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்திய மீனவர்களில 140 பேர் திருகோணமலையிலுள்ளதாக குலதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கொழும்பு துறைமுகத்தில் ஈரானிய நீர்மூழ்கிக் கப்பல்

(கொழும்பு)

ஈரானிய நீர்மூழ்கி உள்ளிட்ட போர்க்கப்பல்களின் அணியொன்று நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில்வளர்ந்துள்ள நெருங்கிய உறவை வெளிப்படுத்தும்வகையில், போர்க்கப்பல்களின அணியொன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

போர்க்கப்பலான ஐ.ஆர். என்.எஸ் பண்டர் அப்பாஸ், பயிற்சிக கப்பலான ஐ.ஆர்.என்.எஸ். அல் போர்ஸ், கனரக தரிக்வகை நீர்மூழ்கியான யூனெஸ ஆகியவற்றைக் கொண்ட ஈரானியக் கடற்படை அணியே மும்பைத துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு வந்துள்ளன.

இவை இன்று திங்கட்கிழமை வரை கொழும்பில் தரித்து நின்றுவிட்டு ஓமான் நோக்கிப புறப்படவுள்ளன. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 100 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 40 | 100 |
| தக்காளி | 60 | 60 | 70 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 30 | 30 | 40 |
| கோவா | 15 | 20 | 40 | 40 |
| கரட் | 40 | 60 | 60 | 60 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 - 190 | 140 | 180 | 120 - 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 110 | 160 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 60 - 90 | 50 | 90 | 80 |
| லீக்ஸ் | 70 | 60 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 50 | 50 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 130 | 160 |
| முருங்கைக்காய் | - | 250 | - | 280 |
| போஞ்சி | 110 | 80 | 120 | 80 |
| கத்தரி தம்புள்ள | 40 | - | - | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 50 | 30 | 30 - 40 |
| இராசவள்ளி | 120 | 120 | 180 | 150 |

# நல்லூர் கோட்ட அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கோட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டத்தின் பதில் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் அறிவித்துள்ளார். (அ)

# இராசி பலன்

**23.12.2013**
**(மார்கழி 8, திங்கட்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு**
**சஷ்டி பின்னிரவு 2.03 மணிவரை**
**மகம் பிற்பகல் 1.18 மணிவரை**
**இராகுகாலம் 7.55 - 9.25 மணிவரை**
**சுபநேரம் 12.25 - 1.55 மணிவரை**

**மேடம்**

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருங் கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**இடபம்**

சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் சிலரை திருப்திப் படுத்துவதற்காக முக்கியமான பொறுப் புக்களை எடுத்து நடத்த வேண்டிய சூழ் நிலை உருவாகும்.

**கடகம்**

பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்**

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகலாம், குடும்ப பொறுப் புக்களும் சுமைகளும் கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி**

குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் கிட்டும், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**

குடும்ப சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கை உண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமான நாள், போசன நன்மையுண்டு, சயன சுகமான நாள்.

**விருச்சிகம்**

பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு, நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**

ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும், எதிர்பாராத செலவுகள் இடம்பெறலாம், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மகரம்**

வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, உடல்நிலையான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

**கும்பம்**

குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மீனம்**

நல்லவர்களின் தொடர்பால் நன்மைகள் நடைபெறும், அலுவலகப் பணிகள் துரிதமாகும், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்திலேயே செய்து முடிப்பீர்கள், பழைய பாக்கிகள் கிடைக்கும்

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுற்றுலாவை வளர்க்க சீனாவில் பிரசாரம்

இலங்கை சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் சீனாவில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. சீனாவில் உள்ள சுற்றுலா முகவர்களின் ஊடாக அதிகளவான சீன சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு கவர முடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தமொன்ற சீன மற்றும் இலங்கை சுற்றுலா துறையினருக்கும் இடையே கடந்த வாரம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேரடியாக ஆராயும் நோக்கில் 13 பேரைக் கொண்ட சீனச் சுற்றுலாத்துறை நிபுணர்கள் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொமர்ஷல் வங்கியின் 24 மணிநேர தன்னியக்க வங்கிச் சேவை



கொமர்ஷல் வங்கி அதன் முதலாவது 24 மணிநேர தன்னியக்க வங்கிச் சேவை நிலையத்தை வார்ட் பிளேசில் திறந்து வைத்துள்ளது.

நாள் முழுவதும் விரிவான பல சேவைகளை வழங்கும் வகையில் இந்தநிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சேமிப்புக் கணக்குகளைத் திறத்தல், நிலையான வைப்புக்கள், இணைய வங்கிச் சேவை, கடன் அட்டை கொடுப்பனவுகளைச் செலுத்தல், ATM மூலமான பணம் பெறல் மற்றும் காசு, காசோலை வைப்பிடல் போன்ற பல சேவைகளை இந்த 24 மணிநேர தன்னியக்க வங்கிச் சேவை நிலையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

அதி உயர் பாதுகாப்புடன் கூடிய 24 மணிநேர அதிவேக இன்டர்நெட் வசதி மூலம் சக்தியூட்டப்பட்டுள்ள இந்தநிலையம், வாடிக்கையாளர்களுக்கு கணக்குகளைத் திறக்க பல ஆவணங்களைப் பூர்த்தி செய்வதில் செலவிடும் நேரத்தை மீதப்படுத்துகின்றது.

அத்தோடு கணக்குப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள மீண்டும் வங்கிக்கு விஜயம் செய்தல் என்பன உட்பட பல விடயங்களில் வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை வழங்குகின்றது.

இந்த தன்னியக்க வங்கிச் சேவை மூலம் இனிவரும் காலங்களில் வாடிக்கையாளர்கள் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் செய்ய முடியும் என வங்கி அறிவித்துள்ளது.




# போஜோ அறிமுகப்படுத்தும் ‘208’ புதிய ரக மோ.வாகனம்

இன்றைய உலகில் மோட்டார் வாகனத்துறையில் முன்னிலை வகித்து வரும் போஜோ நிறுவனத்தின் பிரசித்திப்பெற்ற "2" தொடரிலான ஆகப்பிந்திய வடிவமான 208 எனும் புதிய ரக மோட்டார் வாகனத்தை இலங்கையில் உள் ஏக விநியோகஸ்த் தரான "கார் மார்ட்" நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

208 ரக மோட்டார் வாகனமானது மிதக்கும் கம்பித்தடுப்பு, ஒளி அடையாளங்கள், ஒளித் தெறிப்பு மிக்க பின்புற விளக்குகள் என ஒவ்வொரு விபரமும் கூறையின் மீது கூட கண்ணுக்குப் புலப்படக்கூடிய வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள பொது தொகுதியுடனான பூரண இசைவுத் தன்மையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

207 தர வாகனத்திலும் பார்க்க சிறியளவிலான வெளித்தோற்றப் பரிமாணங்களை இந்தப் புதிய 208 ரக வாகனம் கொண்டுள்ள போதிலும் அதற்கு முந்திய மொடலுடன் ஒப்பிடுகையில் பாரியளவிலான உட்புற இட வசதியைக் கொண்டுள்ளதுடன் 207 ரக வாகனத்தில் ஏற்கனவே உள்ள பின்பக்க ஆசன வசதியை விட 5Cm கூடுதலான முழங்கால் அறை வசதியையும் உள்ளடக்கியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

## பங்குச் சந்தை விபரம்

COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,795.66 | 5,857.36 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3185.67 | 3228.17 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,491.745

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி.லீசிங் (x) (0.40), ஜி.எஸ். பினான்ஸ் (550.00), சிலோன் லெதர்(w) (1.80),ரெஸ் அக்ரோ (x) (1.30),பிசி ஹவுஸ்(0.70).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** த பினான்ஸ் கோ (x) (3.60),சிலோன் லெதர்(w) (1.30), த பினான்ஸ் கோ (10.20), டிப்ட் புரொடெக்ஸ்(88.20), மிரமா([illegible]).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# செலான் பணிப்பாளராக பாலபட்டபெந்தி நியமனம்

2013 நவம்பர் 27-ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் விதத்தில் செலான் வங்கி பி.எல்.சி.யின் நிறைவேற்று-அந்தஸ் தற்ற பணிப்பாளராக ஹிமாசி இசுறு பாலபட்டபெந்தி நியமிக்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. செலான் வங்கியின் பணிப்பாளர் சபையில் இருந்து பியதாசகுட பாலகே இராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை அடுத்தே இந்நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொழில்சார் ரீதியில் ஒரு சட்டத்தரணியான பாலபட்டபெந்தி , இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் ஒரு பணிப்பாளராக அங்கம் வகிக்கின்ற அதேநேரம் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் பென்சில்வேனியா, பிட்ஸ்பேர்க் நகரத்தில் உள்ள பிட்ஸ்பேர்க் பல்கலைக் கழக சட்டக் கலாசாலையில் L.L.M. பட்டத்தைப் பெற்றுக் கொண்டவராவார்.

# வாடிக்கையாளர் பிரிவை விரிவுபடுத்தியது செலிங்கோ



நாடு முழுவதும் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவைகளை வழங்கும் வகையில் செலிங்கோ லைஃப் நிறுவனம் அதன் வாடிக்கையாளர் உறவுகள் பிரிவை வேறு ஒரு இடத்துக்கு மாற்றி மேலும் விரிவாக்கியுள்ளது.

தற்போது இந்தப் பிரிவில் 48 ஊழியர்கள் உள்ளனர். 4 அலகுகள உதவி. இதில் கம்பனியால் நடத்தப்படும் வாடிக்கையாளர் அழைப்புப் பிரிவும் அடங்கும். இதில் மாதாந்தம் சுமார் 9000 அழைப்புக்கள் செவிமடுக்கப்படுகின்றன. புதிய வாடிக்கையாளர் உறவுகள் பிரிவானது அண்மையில் திறந்து வைக்கப்பட்ட செலிங்கோ ஹெல்த் கொயார் சேர்விஸஸ் டோமோ தெரபி பிரிவு அமைந்துள்ள கட்டிடத்தின் மேல் பகுதியில் இலக்கம் 70 பார்க் வீதி கொழும்பு-02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

பல்வேறு அலைவரிசைகள் ஊடாக வாடிக்கையாளர்கள் தற்போது செலிங்கோ லைஃப் உடன் தொடர்பு கொள்ள முடியும். பெக்ஸ், தொலைபேசி, மின் அஞ்சல், ஸ்கைப் என எல்லா வகையான தொடர்பு கொள்ளல் வழிமுறைகளையும் பயன்படுத்தி வாடிக்கையாளர் அளப்பரிய நன்மைகளை தற்போது அடைந்து கொள்ள முடியும் என கம்பனி அறிவித்துள்ளது.

# ஜப்பானின் வர்த்தக நம்பிக்கை அதிகரிப்பு

ஜப்பானின் வர்த்தக நம்பிக்கை ஆறு வருடங்களின் பின்னர் அதிகரித்துள்ளது.

பாரிய உற்பத்தியாளர்களின் சுட்டெண் கடந்த செம்டெம்பர் மாதம் அதிகரித்துள்ளதாக ஆய் வொன்றில் தெரியவந்துள்ளது.

அத்துடன் பாரிய நிறுவன ங்கள தமது மூலதனத்தை அடுத்த ஆண்டு 4.6 வீதத்தால் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஊக்க கொள்கைகளை இந்த முடிவுகள் எடுத்துக் காட்டுவதாகவும் இதன்மூலம் வளர்ச்சி ஏற்படும் எனவும் பொருளியல் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டில் 2 தசாப்தமாக நீடிக்கும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த பிரதமர் அண்மைய மாதங்களில் [illegible] நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

# கம்பனிகள் முரண்பாட்டு சபையின் தலைவராக பாயிஷா நியமனம்



கம்பனிகள் முரண்பாடு சபையின் தலைவராக சட்டத்தரணி பாத்திமா பாயிஷா முஸ்தபா மாக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணிகளான மீராசாஹிப் மஹ்ரூப், டப்ளியூ.ஏ.திலங்க வீரசிங்க, பீ.மான மடுவ மற்றும் சிராஸ் எம்.நூர்தீன் ஆகியோர் இந்த சபையின் உறுப்பினர்களாவர்.

புகழ்பெற்ற சட்டப் பின்னணியைக் கொண்ட பாத்திமா பையிஷா முஸ்தபா மாக்கர், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஷ் முஸ்தபாவின் மகளும் பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் சகோதரரியுமாவார்.

சி.எம்.எஸ் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் லண்டன பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகம் மற்றும் கம்பனி சட்டத்தில் முதுமாணி பட்டம் பெற்றுள்ளார். இவர் பொதுநலவாய வர்த்தக பெண்கள் (இலங்கை) தலைமைத்துவ குழுவின் ஸ்தாபக அங்கத்தவராக உள்ளார்.

கம்பனிகள் முரண்பாடு சபை கம்பனிகள் சட்டம் இலக்கம் 07/2007 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆண்டறிக்கைக்கான விருது பலவற்றை வென்றது டிமோ



இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வோட்டர்ஸ் எட்ஜில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த ஆண்டு அறிக்கைக்கான விருது வழங்கும் நிகழ்வில் டீமோ பல விருதுகளை வென்றுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு இலங்கை வர்த்தக சம்மேளனம் நடத்திய Sustainability Awards 2013 நிகழ்வில் கிடைத்த உயர் கௌரவத்திற்கு மேலதிகமாக இந்த வெற்றிகள் டீமோவுக்கு உயர் அங்கீகாரத்தையும் அதிக பெருமையையும் பெற்றுக் கொடுத்துள்ளன.

ஆண்டறிக்கைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் டீமோவுக்குப் பல பிரிவுகளில் விருதுகள் கிடைத்தன. இவற்றில் முதன்மையானது Excellence in Integrated Reporting இல் கிடைத்த விசேட அங்கீகாரம். இலங்கையில் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் என்ற Intergrated Reporting பிரிவில் டிமோ தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் Excellence in Integrated Reporting ஆகியவற்றில் சிறந்த அறிக்கைக்காகவுடம் Diversified Holdings பிரிவில் தங்க விருதையும் டீமோ பெற்றுள்ளது.

Best Corporate Citizen Sustainability Awards நிகழ்வில் இலங்கையின் Best Corporate Citizen என்ற அங்கீகாரத்தை டீமோ பெற்றதற்கு மேலதிகமாக Best Corporate Citizen Sustainability Award 2013 (முதல் பத்து சிறந்த கூட்டு நிறுவனங்கள், சமூக பேண்தகுதுறை) விருதையும் Best Sustainability Project Awards 2013 மற்றும் கடலாமை பாதுகாப்பு திட்டங் கள் ஆகியவற்றுக்காக மெரிட் சான்றிதழ்களையும் டீமோ வென்றுள்ளது.

இந்த சாதனைகள் பற்றிக் கூறிய ரஞ்சித் பண்டிதகே,

"நாம் உண்மையிலேயே சொல்வதன்படி செயற்படுகின்றோமா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் இவை. எமது வணிகச் செயற்பாடுகளில் உயர் நியமங்களைப் பின்பற்றும் நாம், பேண்தகு தன்மைக்கு முக்கியத்துவம் வழங்குகின்றோம். இதற்காகவே உலகின் மிகச்சிறந்த வியாபார நியமங்களுடன் இணைந்து நாம் பணியாற்று கின்றோம். எமது வாக்குறுதிகளை மெய்யாக்கும் விதத்தில் அவற்றை நாம் செயற்படுத்துகின்றோம் என்பதை உறுதி செய்யும் விருதுகள் இவை" என்றார்.

2013-ம் ஆண்டில் இலங்கையில் பணியாற்றுவதற்குச் சிறந்த பணியிடம் எனும் விருதும் டீமோவுக்குக் கிடைத்திருந்தது.

இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்களின் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக டீமோ விளங்குகின்றமை இதிலிருந்து தெளிவாகின்றது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.19 | 132.35 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 210.76 | 217.25 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 175.11 | 181.29 |
| சுவிஸ் பிராங் | 142.78 | 148.34 |
| கனேடிய டொலர் | 120.43 | 124.81 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.82 | 118.38 |
| சிங்கப்பூர் டொலர் | 101.48 | 105.01 |
| ஜப்பான் யென் | 1.23 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.60 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் விருது வழங்கி கௌரவம்



(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வாண்டு வழங்கப்பட்ட கலாபூஷண விருதினை வைரமுத்து சிவநேசன் பெற்றுள்ளார். இவர் கலை, இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் ஈடுபட்டதுடன் பாசுரங்கள் இயற்றுதல், ஆலயங்களில் பண்ணிசை பாடுதல் போன்றனவற்றிலும் ஈடுபடுகின்றார். (அ-9)

# முத்தரப்பு கடல் பாதுகாப்பு கூட்டு பயிற்சி தொடர்கிறது

(கொழும்பு)

இலங்கை, இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளின் கடற்படைகள் பங்கேற்ற, இந்தியப் பெருங்கடலில் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்த இரண்டு நாட்கள் முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளன.

இதுதொடர்பாக இலங்கை கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய, தெரிவிக்கையில்

"இந்தியக் கடலோரக் காவற்படையின் இரண்டு கப்பல்கள் கடந்த 18ஆம் திகதி திருகோணமலைக்கு வந்தன.

இவை திருகோணமலையில் தரித்து நின்று முத்தரப்பு பேச்சுக்களில் பங்கேற்றன.

இந்த பேச்சுக்களின் முடிவில், மேலதிக நடவடிக்கை குறித்த திட்டம் ஒன்று வரையப்படும்.

இந்த முத்தரப்பு பேச்சுக்கள், முக்கியமாக போதைப்பொருள் கடத்தலை தடுப்பது, கடற்கொள்ளையை தடுப்பது குறித்தே நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு படகில் அகதிகள் செல்வது முற்றாகவே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முன்னரைவிட இலங்கையின் சிறப்பு பொருளாதார கடல் எல்லை 29 மடங்கு விரிவாகியுள்ள நிலையில், அதனைக் கண்காணிக்க குறைந்தது ஐந்து கப்பல்கள் கடற்படைக்குத் தேவைப்படுகிறது.

இலங்கைக்கு மேற்கே 6 ஆயிரம் கடல்மைல் தொலைவில் அரேபியக் கடலில் செயற்படும் கடற்கொள்ளையர்களின் நடவடிக்கைகளால் இலங்கைக்கு உடனடியாக பாதிப்பு ஏதும் இல்லை.

இந்தப் பிராந்தியத்தில் செயற்பாடுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை கடற்படை தரமுயர்த்தப்பட வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தைகளில் இலங்கை இராணுவம் மற்றும் விமானப்படையும் பார்வையாளராக கலந்து கொண்டுள்ளன.

இந்த பேச்சுவார்த்தைகளுக்காக திருகோண மலைக்கு வருகை தந்த இந்தியக் கடலோரக் காவற்படையின் விஸ்வாஸ்ட், ராஜகமல் ஆகிய கப்பல்கள், நேற்று முன்தினம் வரை திருகோணமலையில் தரித்திருந்தன.

அவை அங்கிருந்து புறப்பட்டு, நேற்று கொழும்பு துறைமுகத்தை அடைந்தன.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை இவை இரண்டும் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது, இலங்கைக் கடற்படை மற்றும் கடலோரக் காவற்படையுடன் இணைந்து தேடுதல், மீட்பு, உள்ளிட்ட கூட்டுப் பயிற்சிகளில் இந்தியக் கடலோரக் காவற்படையினர் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன், திருகோணமலைக்கும், கொழும்புக்கும் இடையில் பயண ஒத்திகை ஒன்றிலும் இவை ஈடுபடவுள்ளன.(அ-2)

## ஹெரோயின் விநியோகிக்கும் மூன்று நபர்கள் கைதாகினர்

இந்தியாவின் புதுடில்லியில் 30 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான 9 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவின் தெற்கு பகுதிகள் மற்றும் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவது பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்தவர். ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் ஹெரோயின் போதைப் பொருள் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என டில்லி பொலிஸ் துறையின் பிரதி ஆணையாளர் சஞ்ஜீவ்குமார் தெரிவித்தார். (அ-2)

## தமிழர் பிரதிநிதியைப்போல் கமரூன் செயற்பட்டார்

### இலங்கை குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய கொழும்பு மாநாட்டின் போது புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதியை போன்று செயற்பட்டதாக பிரித்தானிய இலங்கை குழு குற்றம் சுமத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது கமரூன், இலங்கையின் உள்ளகப் பிரச்சினையில் தலையிட்டதாக குற்றம் சுமத்தி, இந்தக்குழு கமரூனுக்கு மனு ஒன்றையும் கையளித்துள்ளது.

ஜனநாயக நாடு ஒன்றின் உள்ளூர் விடயங்களில் தலையிடும் போது அது விடுதலைப்புலிகளின் கனவு நனவானமைக்கு சமனானது என்றும் பிரித்தானிய இலங்கைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இலங்கை தொடர்பாக பிரித்தானிய முடிவுகளை மேற்கொள்ளும் போது அங்கு சிங்களவர்களும் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும் என்றும் பிரித்தானிய இலங்கைக்குழு கோரியுள்ளது.

இந்தநிலையில் தமது மனுவுக்கு பிரித்தானிய பிரதமர் காரியாலயத்தில் இருந்து பதில் கிடைத்துள்ளதாக பிரித்தானிய இலங்கை குழுவின் தலைவர் ஜனக அழகப்பெரும, தாம் குறித்த மனுவை பரிசீலனை செய்வதாக அந்த பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (அ-2)

## தென்சூடானுக்கு செல்லும் இலங்கையருக்கு எச்சரிக்கை

தொழில் வாய்ப்புகளுக்காக தென் சூடான நாட்டுக்கு செல்வது தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கேட்டுள்ளது.

தென் சூடானில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக இலங்கையர்களுக்கு பாதிப்புகள் ஏற்படக் கூடும் என பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் சூடானுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுச் செல்வோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஆலோசனைகளை பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தென் சூடானில் இலங்கையை சேர்ந்த சுமார் 75 பேர் தொழில் புரிந்து வருகின்றனர். தேவையேற்பட்டால் இவர்களை திருப்பி அழைப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தென் சூடான் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றும் நோக்கில் புரட்சிப் படையினர் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். அண்மை நாட்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் சுமார் 500 பேர் உயிரிழந்தனர். (அ-2)

## எனது உயிருக்கு அச்சுறுத்தல்

### பிரதமரின் இணைப்புச் செயலாளர்

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பிரதமரின் இணைப்பு செயலாளரான கீர்த்திஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட, தென் ஆசியாவில் மீட்கப்பட்ட பெருந்தொகை ஹெரோயின் போதைப்பொருள் கொள்கலனை விடுவிக்குமாறு பிரதமரின் சார்பில் கொள்கலன் இறக்குமதியாளர்களுக்கு கடிதம் விநியோகித்ததாக குறித்த செயலாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் தமக்கு சிலர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக கீர்த்திஸ்ரீ குறிப்பிட்டுள்ளார். எனினும் அச்சுறுத்தலை விடுப்பவர்கள் யார் என்பதை அவர் குறிப்பிடவில்லை. தகுந்த நேரம் வரும் போது அவர்களின் பெயர்களை வெளியிடப்போவதாகவும் கீர்த்தி குறிப்பிட்டுள்ளார். இச் சம்பவத்தில் ஈடுபடுபவர்கள் பிரதமரையே இலக்கு வைத்துள்ளனர். எனினும் தாம் எதிர்ப்பார்க்காத விதத்தில் சிக்கலில் மாட்டிக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1969 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 52.5 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: மேற்பார்வையாளர்<br>தொ.இ: B/2673 | பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 48.75 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ பட்டதாரி பயிலுனர்<br>தொ.இ: G/622 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 2 கி.பா: 12<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: CIMA (Following)<br>தொ.இ: B/2674 | பிறப்பு: 1975 இந்து (DO)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 12.75 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/626 |
| பிறப்பு: 1984 இந்து (Kurukulam)<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 24.25 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc Computer (UK – Student Visa)<br>தொ.இ: B/2677 | பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 25.25 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MA, HNDE, PGDE / விரிவுரையாளர்<br>தொ.இ: G/631 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 18 செவ். 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்<br>தொ.இ: B/2680 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 36.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'3" தகைமை/தொழில்: B.FA (Hons), MA / பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/633 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 350 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் மீன் சந்தை அமைக்க அனுமதி

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் வாழ்வெழுச்சி திட்டத்தினூடாக சுமார் 350 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள புதிய மீன் சந்தைக்கான அனுமதி ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளினது பூரண ஒத்துழைப்புடன் எதிர்ப்பின்றி கிடைத்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஐங்கரன் நாகரஞ்சினி தலைமையில் நடைபெற்ற விசேட சபைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.


அமைக்கப்படவுள்ள மீன் சந்தைக்கான நிலத்தினை சங்கானை பட்டின அபிவிருத்தி சபை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது.

7 பரப்பினைக் கொண்ட இந்நிலமானது பல இலட்சம் பெறுமதியுடையதும் சங்கானை பிரதேச செயலகத்துக்கு பின்புறமாகவும் மண்டிகை குளத்துக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது.

நடைபெறவுள்ள இவ்வேலைத்திட்டத்துக்கான பூரண ஒத்துழைப்பை வழங்க சங்கானை பிரதேச செயலகமும் மற்றும் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை உட்பட இப் பிரதேசத்தின் பொது அமைப்புக்களும் முன்வந்துள்ளது.

தற்போதுள்ள மீன்சந்தையானது எதிர்காலத்தில் சங்கானை நகரமயமாக்கல் திட்டத்தின் மூலம் வாகனத் தரிப்பிடமாக மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சபைக் கூட்டத்தில் ஆளும். எதிர்த்தரப்பு உறுப்பினர்கள், பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-15)




# சிறுகதை போட்டியில் முதலாமிடம்



(மல்லாகம்)

அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் சிறுகதைப் போட்டிப் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் விழா கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பீ.ஏக்கநாயக்க தலைமையில் கொழும்பு தேசிய நூதனசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் விழாவில் கனபேர் வந்து போயிருக்கினம் எனும் தலைப்பிலான சிவராஜாவின் சிறுகதைக்கு முதற்பரிசு, நினைவுக் கேடயம், சான்றிதழ் மற்றும் பணப் பரிசினை தலைவர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பீ.ஏக்கநாயக்க வழங்கிக் கௌரவித்தார். (அ-9-21)

# நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இருவாரமாக வைத்தியர் இல்லை

(மானிப்பாய்)

நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள வைத்தியசாலையில் சுமார் 2 வாரங்களுக்கு மேலாக வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் ஒரு வைத்தியசாலை மாத்திரமே உள்ள நிலையில் இரண்டு வாரங்களாக அங்கு வைத்தியர்கள் இல்லை என அப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர் . முன்னர் வைத்தியசாலைக்கு இரு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் கடமையாற்றி வந்த போதிலும் கடந்த இரு வாரங்களாக வைத்தியர் எவரும் இல்லாமையினால் பெரும் நெருக்கடிக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது அங்கு செல்லும் சாதாரண நோயாளர்களை தாதி உத்தியோகத்தர் ஒருவர் பரிசோதித்து சிகிச்சை அளித்து வருகின்றார்.

ஏனைய நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையையோ அல்லது வேறிடத்திலுள்ள வைத்தியசாலையோ நாடவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு இப்பிரதேசத்திலிருந்து ஏனைய வைத்தியசாலைக்குச் செல்வதாயின் கடலைத் தாண்டியே செல்லவேண்டும். இந்நிலையில் அம்புலன்ஸ் கப்பலும் பழுதடைந்துள்ள நிலையில் தனது சேவையை இடைநிறுத்தியுள்ளது. இதனால் நோயாளர்களை சாதாரண படகுகளிலும் கடற்படையினரின் படகுகளிலுமே கொண்டு செல்லவேண்டிய நிலை யேற்பட்டுள்ளது.

இவ்வாறாக நீண்டதூரமான கடலைக் கடந்து வேறு வைத்தியசாலையை நாடுவதற்கு முன்னர் உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் நிலைமையும் உள்ளதாக மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே இப்பகுதியில் வைத்தியர் பிரச்சினை காலத்திற்குக் காலம் தொடர்ந்து வருவதால் உரியவர்கள் இதற்கு தீர்வு பெற்றுத் தரவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-23)

# நத்தார் நிகழ்வு

(தும்பளை)

பருத்தித் துறை கற்கோவளம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையத்தினரால் நத்தார் பண்டிகை நிகழ்வு நாளைமறுதினம் புதன் கிழமை மாலை 4 மணிக்கு நிலையத் தலைவர் எம்.காளிதம்பிதலைமையில்நடைபெறவுள்ளது.

நிகழ்வின் ஆசியுரையை கற்கோவளம் மெதடிஸ்த திருச்சபையின் அருட்சகோதரர் க.ஜெயக்குமார், சிறப்புரைகளை யோகாசன ஆசான் மா.ரட்ணசோதி , கற்கோவளம் கிராம சேவையாளர் எஸ்.கௌதமன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வும் நத்தார் வருகையும் இடம்பெறவுள்ளது. (அ-9-19)




# உள்ளத்தில் ஏற்படும் சமாதானமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும்

## யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர்

(யாழ்ப்பாணம்)

ஆளுநரினால் சமாதானத்தை கொண்டு வந்து தரமுடியாது .எங்கள் உள்ளத்தில் சமானத்தை ஏற்படுத்த வேண்டும் என யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம்மாலைஇடம்பெற்றகிறிஸ்மஸ் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லோருடைய மனதிலும் அன்பு வளர வேண்டும். மற்றவர்களுக்கு அன்பு செலுத்தினால் தான் நாமும் அன்பைப் பெறலாம்.

இந்த நாட்டிலே நாங்கள் சமாதானம் வேண்டும் என்று சொல்கின்றோம். சமாதானம் எங்களுடைய உள்ளத்தில் இருந்தால் தான் சமாதானம் நாட்டிலும் வரும். எங்களுக்கு அரசாங்கமும் சமாதானம் தரமுடியாது. ஆளுநரும் சமாதானம்.தரமுடியாது. எங்களுடைய உள்ளத்தில் சமாதானம் இருந்தால் தான் நாட்டிலும் சமாதானம் வரும்.

இதைவிடுத்து வேறு விடயங்களைப் பேசுவதால் எந்தவிதப் பிரயோசனமுமில்லை. உண்மையான சமாதானம் எங்களிடத்தில் இல்லை, அன்பில்லை, மற்றவர்களை மதிப்பதில்லை.

எங்கள் உள்ளத்தில் சமாதானம் இல்லை என்றால் வேறு இடத்திலிருந்து சமாதானம் வராது. இதனைத் தான் இயேசு கிறிஸ்துவும் சொல்கிறார். நல்ல மனதோர்க்கு சமாதானம். நல்ல மனதை நாங்கள் உருவாக்கி கொண்டால் எங்கள் வீட்டிலும் சமாதானம் வரும் நாட்டிலும் சமாதானம் வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பொலிஸாரைப் போல் வேடமிட்டு மோசடி செய்த நால்வர் கைது






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீதி போக்குவரத்து பொலிஸாரின் தலைக் கவசத்தினை தயாரித்து மோசடி செய்த நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட மேற்படி நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற தலைக் கவசத்தில் Puplic என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரைப் போன்று மோட்டார் சைக்கிள்களில் நடமாடி மோசடிகளில் குறித்த நபர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. பொதுமக்களினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டினையடுத்து கைது செய்யப்பட்ட மேற்படி நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் எனவே இரவு நேரங்களில் தேவையற்று கூடும் நபர்களை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)





நத்தார் பண்டிகையும் புது வருட நிகழ்வும் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மாற்றுவலுவுடையோர் ஒருவருக்கு பரிசுப் பொதி வழங்குவதையும் அருகில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் நிற்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாத தீவிரவாத குழுக்களால் பள்ளிவாசல்கள் உடைக்கப்படுகின்றன

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**பள்ளிவாசல்கள், கோயில்கள் இனந்தெரியாத தீவிரவாத குழுக்களினால் உடைக்கப்பட்டு வருகின்றன. இவையனைத்திற்கும் அரசாங்கமே மூல காரணமாகும். இன வாதத்தை தூண்டி வாக்குகளை சேகரிக்கும் முயற்சியில் அரசு களமிறங்கியுள்ளதென மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவக்கையில், அரசாங்கத்திற்கு இனப்பிரச் சினையை தீர்ப்பதற்கு எவ்வித தேவைப் பாடும் கிடை யாது. அதனால் போலியான குழுவான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் காலத்தை அது நீடித்துள்ளது. இக்குழுவின் காலதனத நீடிப்பதில் எவ்வித பயனு மில்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப் பட்டவுடனேயே நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். இக் குழுவினால் எவ்வித பிரயோசனமும் கிடையாது. இது நாட்டு மக்களை ஏமாற்றும் போலியான குழுவா கும்.

இது ஒரு வெள்ளை யானையைப் போன் றதாகும். இதேவேளை பாராளுமன்ற தெரி வுக்குழுவில் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் தேசிய கூட்ட மைப்பு போன்ற முக்கிய கட்சிகள் இணைய மறுப்பு தெரிவித்துள்ளன. இது அரசின் போலியான குழு என்பது அனைவருக்கும் தெரியும்.

அரசாங்கத்திற்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான எந்தவொரு தேவையும் கிடையாது. இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு இத்தெரிவுக் குழு தேவையில்லை. அரசு நினைத்திருந்தால் தீர்வு எப்போதோ காணப் பட்டிருக்கும். அரசிற்கு இந்நாட்டை ஒற்று மைப்படுத்த வேண்டிய கடப்பாடு ஒரு போதும் இல்லையென்றே கூற வேண்டும்.

இதேவேளை கடந்த சில மாதங்களாக கோயில்கள், பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டு வருகின்றன. தெஹிவளையில் மூன்று பள்ளிவாசல்களில் தொழுகைக்கு தடை விதித்ததுடன் கொஹிவளை பள்ளிவாசல் மீது இனந்தெரியாத தீவிரவாத குழு தாக் குதல் நடத்தியுள்ளது. இவையனைத்தும் அரசின் சதித்திட்டமேயாகும். இனவாதத்தை தூண்டி வாக்கு வங்கிகளை அதிகரித்து தமது ஆட் சியை தக்க வைப்பதற்காகவே அரசு இவ்வாறு இனவாதத்தை தூண்டு கிறது.

அதேபோன்று இனவாதத்தை தூண்டி இந்நாட்டில் மீளவும் யுத்த சூழலை உரு வாக்கும் நோக்கமே அரசிடம் உள்ளது. எனவே நேரடியாக தலையிட்டு இவ்வாறான மோசமான செயற்பாட்டை அரசு உடனடி யாக நிறுத்த வேண்டும் என்றார். (அ-2)

# சட்ட் ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சி பத்திரமும் வாகன சாரதி அனுமதி பத்திரத்தின் பிரதியும் கண்டெடு க்கப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரங்கள் திருநெல்வேலி , யாழ்ப்பாணம் எனும் முகவரியைக் கொண்ட பரமலிங்கம் சுரேஷ் என்பவருடையதாகக் காணப்படுகின்றது.

எனவே உரியவர்கள் பிறவுண் றோட் 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவ ரியில் அமைந்துள்ள வலம்புரி காரியா லயத்தில் வந்து ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (அ-9)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532**

# வேலூர் சிறையில் முருகன் திடீர் உண்ணாவிரதம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், தனது மனைவி நளினியை சந்திக்க விடவில்லை என்று கூறி, உண் ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவுப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை நளினியை முருகன் சந்திக்க சிறை நிர்வாகம் ஏற்பாடு செய்யும். அந்த வகையில் நளினி அடைக்கப்பட்டுள்ள பெண்கள் சிறைக்கு முருகன் அழைத்துச் செல்லப்பட்டபோதும் நளினியை சந்திக்க விடவில்லை.

சந்திப்பு என்ற பெயரளவுக்கு என்னை பெண்கள் சிறைக்கு அழைத்துச் சென்று 30 நிமிடம் கழித்து திரும்ப அழைத்து வந்துவிட்டனர்.

எனவே, முறைப்படி எங்களது சந்திப்பை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி உண் ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டார். அவ ரிடம் சிறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். (அ-2)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடி வுகள் வெளியாகியுள்ளன. இவ் முடிவுகளில் முன் னணிப் பெறு பேறுகளை பாடசாலை அதி பர்கள் அறிவித்துள்ளனர். முன்னணிப் பெறு பேறுகளைப் பெற்ற மாணவர் களின் விபரம் வருமாறு,

**யாழ்/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை**

**விஞ்ஞானப்பிரிவு**

ரி.சஜித்திரா- 3ஏ, எஸ்.மயூரி- 2ஏசி, ஏ.சந்திரிக்கா- ஏ2பி, எஸ்.அனுஷிகா- ஏபிசி, கே.வரணிகா- 2பிசி, வி.பவிதா- 2பிசி, எஸ்.மகிந்தினி- 2பிசி, கே.வித்யா- பி2சி, எஸ்.சோபிகா- பி2சி, எஸ்.சிந்துஜா- பிசிஎஸ், ரி.மயூரிக்கா- 3சி, வி.கிரிஷாயினி- 3சி

**விஞ்ஞானப் பிரிவு(ஆங்கில மொழிமூலம்)**

எஸ்.சருசா- ஏ2பி, எஸ்.கார்த்திகாயினி- ஏபிசி, கே.கேமஷாலினி- ஏபிசி

**கணிதப்பிரிவு**

ஆர்.ரம்யா- 3ஏ, எஸ்.சுலோசினி- 3ஏ, ஏ.ஜெனரோமி- ஏ2பி, கே.லக்ஷனா- 2பிசி, ஜி.மாதங்கி- பி2சி, எம்.விதுஷா- 3சி, எஸ். காயத்திரி- 3சி,

**கணிதப்பிரிவு (ஆங்கில மொழி மூலம்)**

ஆர்.அகிலா -3சி

**வர்த்தகப் பிரிவு**

ஏ.ரெய்ஷாயினி- ஏபிசி, எம்.மாதங்கி- 3பி , கே.கார்த்திகா- ஏ2சி எம் .சரண்யா- பி 2சி, எஸ்.சுபர்ணியா- பி2சி.

**கலைப்பிரிவு**

எஸ்.சுபகரி- 2ஏபி, எஸ். தர்மிளா- 2ஏபி எல். ஜெசோதா- 2ஏபி, ஏ. கிரியந்தி- 2ஏபி, எஸ்.சங்கீதா-2ஏசி, ஷ்யூ.அனற்ரெக்சனா-2ஏசி, எஸ்.ஜானகி- ஏ2பி, ரி.சிவதர்சினி- ஏபிசி, கே.சிந்துஜா-ஏபிசி, யுதர்ஷினி-ஏபிசி, வி.பவிதா- ஏபிசி, பி.கம்ஷனா- ஏபிசி,கே.பிரசாலினி- ஏபிசி, எஸ்.பிருந்தா- ஏபிசி2, ஈ.பிருன்யா- ஏபிசி, எஸ்.லாவண்யா- ஏபிசி.

**யா/வட்டு இந்துக் கல்லூரி**

***கலை***

சி.அனுசியா- 2ஏபி, ம.துஷாந்தன்- ஏ2பி, சி.கோபிகா- 2ஏசி, க.லக்சியா- 2ஏசி.

***வர்த்தகம்***

ஆ.நாகதீபன்- ஏ2பி, சி.கவிதா- 2ஏசி, இ.சரண்யா- ஏபிசி, பா.கஜந்தினி- ஏபிசி.

**விஞ்ஞானம்**

த.சிவகணேசன்- ஏபிசி, பி.தயாபரன்- 3சி.

**கிளிநொச்சி மாவட்டம்**

தெ. பிரதா- 2ஏபி (இராமநாதபுரம் ம.வி.) மாவட்ட நிலை-01, க.நிரோஜன்- 2ஏபி (முருகானந்தாக் கல்லூரி) மாவட்ட நிலை 02, கி.முகுந்தன்- 2ஏபி (முருகானந்தாக் கல்லூரி) மாவட்ட நிலை 03, பொ.றுஜிந்தன் 2ஏபி (பூநகரி ம.வி.), ச.சஜீவன் -ஏ2பி (முருகானந்தாக் கல்லூரி), சி.பானுசாந்-ஏ2பி (இராமநாதபுரம் ம.வி.), த.கீதன்-ஏபிசி (முருகானந்தாக் கல்லூரி), பா.யோகினி-ஏபிசி (அக்கராயன் ம.வி.), மு.குகாஜினி-2ஏசி (கிளிநொச்சி ம.வி.), சே.சயந்தனா-ஏபிசி (கனகபுரம் ம.வி.), இ.கஸ்தூரி-ஏபிசி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), த.பகீரதி-3பி (புனித திரேசா பெ.கல்லூரி), செ. கஜலக்சன்-ஏபிசி (கனகபுரம் ம.வி.), ம.விஜயகுமார்-ஏபிசி (கனகபுரம் ம.வி.), அ.மயூரன்-2பிசி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ந.கயூரன்-ஏபிசி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), இ.வினோ-2பிசி (புனித திரேசா பெ.கல்லூரி), சி.சிவகுமார்-ஏபிசி (பூநகரி ம.வி), வி.ஜீவிதா-பி2சி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), அ.பிறின்சியா-2பிசி (முருகானந்தாக் கல்லூரி), தி.தெய்வகௌரி-2பிசி (முருகானந்தாக் கல்லூரி), ச.சோமசுந்தரம்- ஏ2சி (இராமநாதபுரம் ம.வி.), இ.சுஜித்தா- பி2சி (தருமபுரம் ம.வி.), வி.[illegible]-2[illegible] (கனகபுரம் ம.வி.)

**யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை**

**உயிரியல்**

சாம்பவி யோகேந்திரராஜா- 3ஏ, நிவாசினி தனிநாயகம் இளங்கோ- 3ஏ, கார்த்திகா ராஜசிங்கம்- 3ஏ,சந்தனா வசந்தகுமார்- 2ஏபி, சௌமி காயரோகனன்- 2ஏபி, சுகன்யா விமலபாலச்சந்திரன்- 2ஏபி, ஆன் அபிநயா அருள்நேசன்- 2ஏபி, கோபிகா ரவீந்திரன்- 2ஏபி, ரேழங்கி மணிவாசகன்- 2ஏபி, சோபிதா சிவனேஸ்வரன்- 2ஏபி, மதுசோபிகா திவ்யகுமாரன்- 2ஏபி, சோபிதா சக்திவடிவேல்-2ஏபி, சாம்பவி ரமணன்- 2ஏசி, கிருஷ்ணி மனோகரன்- 2ஏசி, நினுஜா தயாபரன்- ஏ 2பி, அச்சுதை ஸ்ரீஸ்கந்தன்- ஏ 2பி, ரோசனா நாகரட்ணம்- ஏ 2பி, மாதங்கி முருகதாஸ்- ஏ2பி, பவித்திரா ரங்கநாதன்- ஏ2பி

**கணிதப் பிரிவு**

அனற்ரூபிசா அன்ரனிரூபநாதன்- 3ஏ, நிசாந்தினி கவிராஜன்- 3ஏ, பிரவீனா பரலோகராஜா- 3ஏ, கபித்தா சுப்பிரமணியம்- 3ஏ, கேதாரணி ஜெதீஸ்வரன்- 3ஏ, திருமகள் பஞ்சலிங்கம்- 2ஏபி, வினுசிகா பஞ்சலோகராஜன்- 2ஏபி, கீர்த்தனா கந்தசாமி- 2ஏபி, துஷாணி சிவராசா- 2ஏபி


# கண்ணீர் அஞ்சலி



சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய சந்ததிப் பூசகரும் ஆலய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவரும் ஓய்வு நிலை அதிபருமான

**சிவஸ்ரீ கா.கதிர்காமத்தம்பி**

(சுழிபுரம்– பறாளாய்)

அவர்கள் 15.12.2013 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தி னருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈஸ்வர விநாயகரை வேண்டுகின்றோம்.

**சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் தேர்த் திருப்பணிச்சபை**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடைபெற்றது திட்டமிட்ட இனக்கொலை

## மக்கள் தீர்ப்பாயம் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றமல்ல. அது ஒரு திட்டமிட்ட இனப் படுகொலை. இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் இப்படுகொலை நடந்திருக்க முடியாது என்று மக்கள் தீர்ப்பாயம் தெரிவித்தது.**

டில்லி செய்தியாளர் மன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குறித்த அமைப்பின் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி கலந்து கொண்டு கூறியதாவது,

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசும், இராணுவமும் சேர்ந்து நடத்திய இனப் படுகொலை, மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து மக்கள் தீர்ப்பாயம் டிசம்பர் 7 முதல் 10 ஆம் திகதி வரை ஜேர்மனியிலுள்ள பிரெமன் நகரில் விசாரணை நடத்தியது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் டென்னிஸ் ஹேலிடே தலைமையிலான அத் தீர்ப்பாயத்தில் சர்வதேச சட்ட வல்லுநர்கள், இனப் படுகொலை வழக்குகளை விசாரிக்கும் வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

விசாரணையின் போது, இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையை இந்தியா எவ்வாறு முன்னின்று நடத்தியது என்பதற்கான ஆதாரங்களை மே 17 இயக்கம் சார்பில் நாங்கள் அளித்தோம். நேரடி சாட்சிகளையும் தீர்ப்பாயம் விசாரித்தது.

இலங்கையில் இன அழிப்பு சம்பவத்தில் இந்தியா ஆயுத உதவி செய்தது, இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளித்தது, தமிழர்களுக்கு எதிரான போரில் தலையிடாமல் இருப்பதற்காக சர்வதேச நாடுகளுக்கு இந்தியா நெருக்குதல் கொடுத்தது, ஐ.நா.விலுள்ள இந்திய அதிகாரிகள் உதவியுடன் இலங்கையில் இனப் படுகொலை நடப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கியது உட்பட பல்வேறு தகவல்களுடன் கூடிய ஆதாரங்களை அளித்தோம்.

இந்தியாவின் மூன்று மிக முக்கிய உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் தமிழர்களுக்கு எதிரான போரை முன்னின்று வழிநடத்திச் சென்றனர் என்பதற்கான ஆதாரங்களையும் அளித்தோம்.

விசாரணையின் முடிவில், "இலங்கையில் நடைபெற்றது போர்க் குற்றமல்ல் அது ஒரு திட்டமிட்ட இனப் படுகொலை. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் இப் படுகொலை நடந்திருக்க முடியாது" என்று மக்கள் தீர்ப்பாயம் தெரிவித்தது.

இப் போரின்போது தமிழ் இன மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதை அறிந்தே இலங்கைக்கு இந்த மூன்று நாடுகளும் உதவியுள்ளன.

அத் தீர்ப்பில் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஈழத் தமிழர்கள் என்றும் அவர்கள் இலங்கையின் தேசிய இனத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பு சர்வதேச அளவில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரிய அவமானமாகும்.

தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கான உரிமையை ஐ.நா. வழங்குகிறது. அதன்படி, ஈழத் தமிழர்கள் எதிர்காலத்தில் தனி நாடு அமைப்பதற்கான உரிமைக்கு மக்கள் தீர்ப்பாயம் அளித்துள்ள இத் தீர்ப்பு முக்கியமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

இனப் படுகொலை நடைபெற்ற பிறகும் இந்தியாவின் பங்களிப்பு தொடர்கிறது.

அங்குள்ள பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை செய்வது, தமிழர்களின் நிலத்தை அபகரிப்பது, உளவியல் ரீதியாக துன்புறுத்துவது உள்ளிட்டவற்றை இங்கை அரசு தொடர்ந்து நடத்திவருகிறது.

அதனால்தான், இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையாக, போர்க்குற்றமாக மட்டும் அதைப் பார்க்காமல், இன அழிப்பு நடவடிக்கைக்கு எதிரான குற்றமாகப் பார்த்து, சர்வதேச விசாரணை நடத்த வலியுறுத்துகிறோம் என்றார். (அ-2)

## புலிப் பொலிஸாரைவிட இலங்கை பொலிஸார் நல்லவர்கள்

### நிரூபிக்க கோருகிறார் பொலிஸ்மா அதிபர்

இதுவரை வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் அறிந்து வைத்திருந்த புலி பொலிஸாரை விடவும் எமது இலங்கை பொலிஸார் வித்தியாசமானவர்கள், நல்லவர்கள் என நிரூபிக்க வேண்டுமென பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் போதே அவர் இந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த கல்லூரியிலிருந்து 240 தமிழ் கனிஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் 233 தமிழ் கனிஷ்ட கான்ஷ்டபிள்களும் வெளியேறினர்.


வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்களுக்கு சிநேகபூர்வமான சேவை வழங்குவது முக்கியம் என பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

பயிற்சி பெற்று வெளியேறும் அனைவரையும் வடக்கு மற்றும் கிழக்கிலிருக்கும் பொலிஸ் நிலையங்களில் சேவைக்கு அமர்த்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை மக்கள் அறிந்துள்ள புலி பொலிஸாரை விட இலங்கை பொலிஸார வித்தியாசமானவர்கள்என இவர்கள் நிரூபிக்க வேண்டுமெனவும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (அ-2)







**புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுபதையும் வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இராசம்மாள் பஞ்சலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப் பாளரின் பாரியார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தும்பளை செய்தியாளர்)**

## பதவிகளுக்கு ஏற்ற வகையில் கண்ணியமாக செயற்படுங்கள்

### ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

இரவில் சுற்றித் திரியும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் சில அமைச்சர்களை ஜனாதிபதி அழைத்து, அறிவுரை வழங்கியுள்ளார்.

இரவு நேரப் பயணங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பதவிகளுக்கு ஏற்ற வகையில் அனைவரும் கண்ணியமாக செயற்பட வேண்டும்.

இந்த எச்சரிக்கையை ஜனாதிபதி கடுமையான தொனியில் விடுத்ததாகவும், குறித்த அமைச்சர்கள் அமைதியாக அறிவுரையை ஏற்றுக் கொண்டு வெளியேறிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் சில அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கொழும்பில் இரவில் சுற்றித் திரிவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பிலேயே ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (அ-2)

## நால்வருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

மொனராகலை மேல் நீதிமன்றம் கொலை குற்றத்துடன் தொடர்புடைய நான்கு பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2002.06.14 ஆம் திகதி படல்கும்புர பொலிஸ் பிரிவு வெஹெரகொட பிரதேசத்தில் கைக்குண்டு தாக்குதல் நடத்தி பொலிஸ் பாதுகாப்பு உதவியாளரை கொலை செய்ததுடன் 3 பொலிஸாருக்கு காயம் ஏற்படுத்தியதாக நால்வர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் நீண்ட கால விசாரணையின் பின் நேற்று முன்தினம் மேற்படி தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## 2014 இல் முக்கிய தேர்தல் நடைபெற வாய்ப்புண்டு

இலங்கையில் அடுத்த வருடம். தேர்தல் ஆண்டாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் முக்கிய தேர்தல்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் என்பனவற்றில் ஒன்று நடத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு குழுக்கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போது இந்த தகவலை ஜனாதிபதி வெளியிட்டார்.

இதேவேளை தென் மற்றும் மேல்மாகாண சபைத்தேர்தல்களும் அடுத்த ஆண்டில் நடத்தப்படவுளளதை ஜனாதிபதி உறுதிசெய்தார்.

இதற்கிடையில் எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதியன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கு முன்னர் தென் மாகாண மற்றும் மேல்மாகாண சபைகள் கலைக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

உள்ளூராட்சி மட்டத்தில் அரசாங்க கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, அதன்காரணமாக உள்ளூராட்சி வரவு-செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமை போன்றகாரணங்களை முன்வைத்தே இந்த தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இக் கூட்டத்தில் சுமார் 1000 பேர்வரை பங்கேற்றிருந்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலகம் உணரட்டும்! ஆனந்தம் பரவட்டும்!



ஆன்மீகம் 74

சத்குரு: சில வருடங்களுக்கு முன், ஸ்பந்தா ஹாலில், பாவ ஸ்பந்தனா வகுப்பு நடத்திக் கொண்டிருந்தேன். உச்ச தருணங்கள் ஒன்றில், பெண்மையின் தனித் தன்மைக்கு சாட்சியாக இருக்க நேர்ந்தது.

காற்றில் அதி தீவிரமாக பெண்மையின் தன்மை நிறைந்திருந்ததால் என் சக்தி, என் உடல்கூட ஒரு பெண்போல இருந்தது. இது போல் இருப்பது எனக்கு புதிதல்ல. ஆனால், அன்றையதினம் இது பன்மடங்காகப் பெருகி, மிக கம்பீரமாக நின்றது. நாம் அனைவரும் ஒரே மூலதனத்திலிருந்து தோன்றினாலும் பெண்மையின் அடிப்படையில்தான் எத்தனை வித்தியாசம்!

இந்த யதார்த்தம் அன்பு பிரம்மாண்ட வடிவம் கொண்டது.

அன்று பெண்மையின் சாரத்தை நான் முழுமையாகப் பருகினேன். நான் சாட்சியாக இருந்த இந்த நிகழ்வில் என் கவனத்தை நிறுத்திய போது அது கவிதையாய் வடிவம் பெற்றது.

இதோ அந்தக் கவிதை...



பெண்
நிலவின் நிழலாய்
பேரானந்த நிகழ்வாய்
பிறந்திட்ட உயிர்களே...

பகலில் சுடராய்
திகழும் என்னுள்
இருக்கும் சூரியன் மட்டும்
படைப்பு தந்த
வரமாய் இல்லை உன் முன்னே...

இரவின் மடியில்
மடிந்து போனது சூரியனோ?
இருளின் குளிரில்
கரைந்து போனது
கதிரவனோ?

நிலவே! உந்தன்
அருளின் அணைப்பில்
நனைந்து போனது
இந்த அகிலமன்றோ?

உருளும் பூமி உறங்கிடவே
உன் கர்ப்பத்தில் சுமந்தனையோ?
உயிருக்கெல்லாம் ஆதாரமாய்
உதயமான சூரியனே
உயர்ந்தவனோ?
அவனே
உன் குளிர் மடியில்
குழந்தையென் பிறந்தவனே!

கருத்துமில்லை
காரணமுமில்லை
பித்துநிலை
விளங்கவில்லை- எனினும் உன்
அன்பு நிலை
நம்பும் நிலைக் கொண்டான்
அந்த படைத்தவனே
உமக்கு பரிசாய் கொடுத்தான்!
உயிர் சுமக்க கருவறையும்
பால் சுரக்க நெஞ்சறையும்

பெண்மை மலரட்டும்,
பிரகாசமாய் ஒளிரட்டும்!
அவள் கருவறையின்
கதகதப்பில்
உயிர் நனையும்


(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# நிலா ஆக்கிரமிப்பில் சீனா...!

அமெரிக்காவையும், ரஷ்யாவையும் அடுத்து கடந்த பத்து வருடங்களாக சீனா விண்வெளியில் தனது தடத்தைப் பதிக்க ஆரம்பித்திருந்தது. அந்த முயற்சியில் சீனா தனது நிலாவிற்கான பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

முயலைத் தரையிறக்கியது. சங்காய் வான்வெளி ஆராய்ச்சி மையத்தின் அறிக்கையின்படி இந்தப் பச்சை முயலானது 30 பாகை வரையான சரிவுகளில் கூடப் பயணம் செய்து மணிக்கு இருநூறு கிலோ மீற்றர் வேகத்தில் சென்று தமது தரை



நிலாவில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்ட பச்சை முயல் எனப்படும் ஆறு சக்கரங்களைக்கொண்ட 120 கிலோ எடையுள்ள இலத்திரனியல் ஆராய்ச்சி வாகனத்தினைச் சுமந்து சென்று சாங்-3 என்ற விண்கலம் சனிக்கிழமை ஐரோப்பிய நேரம் 14 மணியளவில் நிலவின் மீதான வான்பரப்பில் நிலவின் தரைப் பரப்பிலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் உயரத்திலிருந்து கீழிறங்கத் தொடங்கியது. அதிலிருந்து பன்னிரண்டு நிமிடங்களின் பின்னர் நிலவின் மேற்பரப்பில் 400 கிலோ மீற்றர் விரிவான வானவில் வளைகுடா என அழைக்கப்படும் சமநிலப்பரப்பில் தரையிறங்கிய சான்-3 பல மணி நேரங்களின் பின்னர் சீனர்களின் நெடுங்காலக் கனவான இந்த பச்சை ஆராய்ச்சி மையத்திற்குத் தேவையான நிலாவின் தரையமைப்பு, சூழ்நிலை, மற்றும் அனைத்துத் தகவல்களையும் வழங்கும்.

பன்னிரண்டு நாட்களிற்கு முன்னர் நீண்ட பயணம் என்றழைக்கப்படும் செலுத்திக் கலத்தின் மூலம் ஏவப்பட்ட இந்த சாங்-3 வெற்றிகரமாக்த் தரையிறங்கியதை அடுத்து வெற்றிகரமாக நிலவினில் கால் பதித்த மூன்றாவது தேசமாக சீனா தன்னைப் பிரகடனப்படுத்தி உள்ளது. இது வெற்றிகரமாக தரையிறங்கியபோது சீனாவின் பீக்கிங்கில்உள்ள வான்வெளி ஆராய்ச்சி மையத்தின் கரவொலி அவர்களது கனவு நிஜயமானதை உலகிற்குக் கூறியது. சீனாவின் புராணங்களின் படி சந்திரப் புத்தகத்தில் விலங்குகளின் மருத்துவரின் மனைவி சாங் சந்திரனின் தெய்வமாகக் சீனர்களின் இதிகாசத்தில் பேணப்படுகின்றார். இவர் வளர்க்கும் சந்திரமுயல் தான் வாழும் பகுதிக்குள் அளவிடமுடியாத சொத்துக்களுடன் அனைத்து நோய் நிவாரணிகளுடன் இறவாமை பெற்றுவாழும்.

இதனாலேயே விண்கலம் சாங்-3 என அழைக்கப்பட்டு ஆராய்ச்சிக்கலம் பச்சை முயல் எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த முயற்சிக்காகச் சீனா பல மில்லியன் டொலர்களைச் செலவழித்துள்ளது. வெற்றியின் குறிக்கோளுடன் நகர்த்தப்பட்ட இந்த முயற்சியானது சீனாவின் மக்கள் புரட்சிகர இராணுவத்தினால் மேற்பார்வையிடப்பட்டு இந்த வெற்றி ஆட்சியிலிருக்கும் சீனக்கொம்யூனிச வெற்றியின் பேரடையாளமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் விண்வெளிப்போட்டியில் இந்தியாவையும் ஈரானையும் முறியடிக்கும் ஓட்டப்பந்தயத்தில் சீனா முன்னணியில் ஓடத்தொடங்கியுள்ளது. சீனாவின் அரச அதிபர் சீ சின் பயின் இந்த விண்வெளிச் சாதனையை சீனர்களின் கனவு என்ற கோசத்தின் கீழ் தனது ஆட்சியின் விளம்பரமாக மாற்றியுள்ளார். இவர்களின் தொடர்ந்த கியாங்க் திட்டத்தின் கீழ் 2025 இற்குள் நிலவிற்கு முதன் முதலில் மனிதனை அனுப்பும் நாடாகத் தன்னை உருவாக்கும் திட்டத்தில் சீன அரசு உள்ளது.

சீனா மனிதனை நிலவுக்கு அனுப்ப முயற்சி எடுக்கும் நேரத்தில் ஈரான் இரண்டாவது தடவையாகக் குரங்கை விண்வெளிக்கு அனுப்பித் தனது சாதனையை உறுதி செய்துள்ளது. விண்வெளிக்கு ஈரான் 2 ஆவது முறையாக அனுப்பிய குரங்கு பத்திரமாக மீண்டும் பூமிக்குத் திரும்பியது. ஈரான் சமீபத்தில் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் அணு ஆயுத ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்மூலம் 10 சதவீதத்துக்கும் மேல் யுரேனியத்தை செறிவூட்ட கூடாது என்ற சர்வதேச நாடுகளின் நெருக்கடிக்கு ஈரான் சம்மதித்தது. இதற்கிடையில் ஆயுத உற்பத்தி, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றிலும் ஈரான் கவனம் செலுத்தி வருகிறது. விண்வெளி ஆராய்ச்சியிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு தனது முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதன்படி கடந்த ஜனவரி மாதம் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தின் முதல் கட்டமாக குரங்கு ஒன்றை அனுப்பி சோதனை செய்து பார்க்க ஈரான் விஞ்ஞானிகள் முடிபு செய்தனர். டெஹ் ரானில் இருந்து 200 கிமீ தொலைவில் உள்ள செம்னான் என்ற இடத்தில் இருந்து கடந்த ஜனவரி மாதம் விண்வெளிக்கு 2 ஆவது முறையாக குரங்கு அனுப்பப்பட்டது.

அனுப்பப்பட்ட பர்காம் எனப்படும் குரங்கு சில தினங்களுக்கு முன்பு உயிருடன் திரும்பியது. இது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ஈரானின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்று தெரிவித்தனர். இது குறித்து அதிபர் ஹசன் ரவ்கானி தனது டுவிட்டரில், இரண்டாவது முறையாக, பர்காம் குரங்கு பத்திரமாக தரையிறங்கி உள்ளது. விஞ்ஞானிகளுக்கு எனது பாராட்டுக்கள். இது ஈரானின் தொழில்நுட்ப வளர்ச்சியை காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார். இதே முயற்சியில் ஒரு படி முன்னேறி இந்தியா தனது விண்வெளிச் சாதனையாக மங்கல்யான எனப்படும் விண்கலத்தைச் செவ்வாய் நோக்கி ஏவியுள்ளனர். இது மிகவும் வெற்றிகரமாக ஏவப்பட்டுச் செவ்வாய்க்கான பாதையில் முன்னேறிக் கொண்டு உள்ளது. வருங்காலத்தில் விண்வெளி ஆசிய ஆதிக்கத்திற்குள் வருவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. அமெரிக்கா இதைச் சகித்துக் கொள்ளுமா இல்லை தன் தூக்கம் கலைந்து மீண்டும் களமிறங்குமா?

-சோழ கரிகாலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி பூனை!



முன்னொரு காலத்தில் விவசாயி ஒருவர் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை. இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம், என்று நினைத்தார் அவர். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தார். அந்த காட்டில் பூனையே கிடையாது. அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது.

"நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.

அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். நல்ல மனைவியாக நான் நடந்துகொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன், ஒரு பிரபுவை கல்யாணம் செய்துக் கொண்ட பெருமை எனக்கு கிடைக்கும்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும். பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடு வார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரி யுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக் கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்றுவிடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது. முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின்மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல்.

"எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம்.

பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.

எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது.

"எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி.

"எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய்.

"ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்துகொள்ளுங்கள் பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி...

(தொடரும்)




- 1783-ஜோர்ஜ் வாஷிங்டன் இராணுவத்தளபதி பதவியில் இருந்த விலகினார்.
- 1914-முதலாம் உலகப்போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கினர்.
- 1916-முதலாம் உலகப்போர்: எகிப்தின் சினாய்க் குடாவில், கூட்டுப்படைகள், துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றனர்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஜப்பானிய இராணுவம் வேக் தீவைக் கைப்பற்றியது.
- 1947-முதலாவது டிரான்சிஸ்டர், பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1948-பிரதமர் டோஜோ உட்பட ஏழுபேர் ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1954-முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.
- 1958-டோக்கியோ கோபுரம் -உலகின் மிகப்பெரிய இரும்பினாலான கோபுரம், திறக்கப்பட்டது.
- 1979-சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.
- 1986-எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச்சுற்றி வந்த வொயேஜர் விமானம், மிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோனியாவில் தரையிறங்கியது
- 1990-88% சிலொவேனிய மக்கள், யூக்கொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2004-தெற்குப் பெருங்கடலில்உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது
- 2005-சாட், சூடானுடன் போரை அறிவித்தது.

பிறப்புக்கள்

- 1807-அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (இ.1870)
- 1902-சரண் சிங், இந்தியக் குடியரசின் 7-வது பிரதமர் (இ.1987)

இறப்புக்கள்

- 1907-பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (பி.1824)
- 2004-பி.வி.நரசிம்மராவ், ஒன்பதாவது இந்தியப் பிரதமர் (பி.1921)

## பி.வி. நரசிம்ம ராவ்



பி.வி. நரசிம் ராவ் 1921 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். இந்தியாவின் ஒன்பதாவது பிரதமாராக பணியாற்றியவர்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இவர், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராவார். தென் இந்தியாவைச் சேர்ந்த முதல் இந்தியப் பிரதமர் இவரே.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான ராவ், 1962 முதல் 1971 வரை மத்திய அமைச்சரவையில் பங்கு வகித்ததுடன் 1971 முதல் 1973 வரை ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதல்வராகவும் பதவி வகித்தார். பின்னர், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து மத்திய அமைச்சராக விளங்கினார்.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ராவ் பிரதமரானார்.

ஐந்து ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்தார். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததால் இவர், பதவி இழக்க நேர்ந்தது.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தனது 83 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் மருந்தாளராக வர விரும்பினால் அதற்கான வழிமுறைகள்

இலங்கை மருத்துவ சபையில் (Sri Lanka Medical Council) பதிவு செய்யப்பட்ட மருந்தாளராக பதிவதற்கு 21 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரஜையாகவும் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு தகுதிச் சான்றிதழ் பெற்றவராக இருக்க வேண்டும்.

1. மருத்துவ சட்டப்படி இலங்கை மருத்துவ சபையில் இரண்டு வருடங்கள் மருந்தாள பயிலுனராக பதிவு செய்து இலங்கை மருத் துவ கல்லூரி சபை (Ceylon Medical College Council) மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வருடம் தோறும் நடத்தப்படும் மருந்தாளர் வெளிவாரிப் பரீட்சையில் "Certificate of efficiency As Pharmacist" சான்றிதழ் பெறவேண்டும். அல்லது

2. சுகாதார இலாகா மூலமாக (Health Deparment) நடத்தப்படும் பயிற்சித் திட்டத்தில் மருந்தாளர் உள்ளகத்தில் 2 வருடங்கள் பயிற்சியின் பின்னர் இலங்கை மருத்துவக் கல்லூரி சபையால் நடத்தப்படும் பரீட்சையில் "Certificate Of Proficiency as Pharmacist" சான்றிதழ் பெற வேண்டும். அல்லது

3. பல்கலைக்கழகத்தில் மருந்தாளர் பட்டதாரி அல்லது மருந்தாளர் டிப்ளோமா (Universities Act No 16 of 1978) தகுதி இருக்கவேண்டும்.

மேல் குறிப்பிட்ட தகுதிச் சான்றிதழ்கள் பெறுவதற்குரிய கற்கை நெறிகளுக்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகள்.

1. G.C.E.O/L இல் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி.

2. G.C.E. A/L இல் இரசாயன பாடத்தில் விசேட சித்தியுடன் (Credit Pass) வேறு 2 விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

தற்போது Pharmacist (external) பரீட்சைக்குரிய பயிலுநர் மருந்தாளராக (Apprentice pharmacist) பதிவு செய்வதற்கு G.C.E. A/L இல் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி போதுமானதாகவுள்ளது.

மேலும் மருந்தாளர் வெளிவாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கு வயது கட்டுப்பாடு இல்லை.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை மருத்துவ சபையில் மருந்தாளராக பதிவு செய்து தனியார் மருந்தகங்களிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் தமது ஆயுட்காலம் வரை பணியாற்றலாம்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்தாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மேற்படி கல்வித் தகைமையுள்ள ஓய்வு பெறும் நிலையிலுள்ள பட்டதாரிகள், ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் முன்வரவேண்டும்.

வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புக்கள் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) நடத்தி வருகின்றது.

இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்ற பரீட்சையில் இலங்கை முழுவதும் 270 பேர் சித்தியடைந்தார்கள். இவற்றில் யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்ற 20 பேர் உள்ளடங்குவார்கள்.

**நடராசா இராசநேரு**
மருந்தாளர்/விரிவுரையாளர்

# 25 அடி உயரமான சிவபெருமான் சிலை

(மானிப்பாய்)

மாதகல் சம்பில்துறை பகுதியில் 25 அடி உயரமான சிவபெருமானின் சிலை அமைக்கப்பட்டு வருகின்றது.

அங்கிருக்கும் புத்த விகாரைக்கு அண்மையான ஊரவர்களின் முயற்சியுடன் இச்சிலையானது சம்பில்துறை ஐயனார் ஆலய வளவில் 25 அடி உயரமான தியான நிலையிலுள்ள சிவபெருமானின் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான சிலை இதுவாகும்.



கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள இப்பிரமாண்டமான சிலை அடியவர்களின் வழிபாட்டிற்காக மிக விரைவில் திறக்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (அ-9-23)

# திருவாசக முற்றோதல்

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து திருவாசகத் தேன் எனும் பொருளில் சைவசித்தாந்த கலாநிதி செ.கந்தசத்தியதாசனும் மார்கழியும் திருவாசகமும் எனும் பொருளில் திருவாவடுதுறை ஆதீனசைவப்பிரசாரகர் சைவப் புலவர் ஏ.அனுசாந்தனும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

மெய்யன்பர்கள் கலந்து திருவாசகம் பாடியும் பயன்பெறலாம் என செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# மதத் தலங்கள் மீதான தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது

## பொதுபல சேனா தெரிவிப்பு

மதத் தலங்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் யாராக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே அவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடைய வர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

மதங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைத்து நாட்டிற்குள் மீண்டும் பிரிவினை வாதத்தை தோற்று விப்பதற்கு சிலர் முயன்று வருவதாக தெரிகிறது.

எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி அதனை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் முப்பது வருடங்களுக்கு மேலாக நீடித்திருந்த யுத்தத்தால் இன,மத வேறுபாடுகளின்றி எல்லோரும் பாதிக்கப்பட்டார்கள்.

ஆனால், அந்த நிலை தற்போது இல்லை. இருப்பினும் மதத் தலங்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மதவுணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அது எந்த மதமாயிருந்தாலும் சரி. நிச்சயமாக மதிப்பளிக்க வேண்டும். ஆனால் நாட்டில் பல பாகங்களில் மதத் தலங்கள் மீதான தாக்குதல்களை பார்த்தால் பல்வேறு சந்தேகங்கள் தோன்றுகின்றன.

சில இனவாத தீய சக்திகள் நாட்டில் மீண்டும் பிரிவினை வாதத்தை தோற்றுவிப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகள் அடித்தளமாக அமைந்து விடுகின்றன.

எனவே அது தொடர்பில் ஆராய்ந்து அதன் உண்மை நிலையை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தை சர்வ சாதாரணமாக கருதி விடாமல் அதன் பின்னணியில் உள்ளவர்கள் யார்? என்ன நோக்கத்திற்காக இதனை செய்கின்றார்கள்? என்று கண்டறிந்து அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மகரஜோதி மண்டல பூர்த்தி திருவிழா

யாழ்.சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தின் மகர ஜோதி மண்டல பூர்த்தி விழாவை முன்னிட்டு பல்வேறு பூஜை நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இருமுடித் தேங்காய் நெய் நிரப்புதல் நடைபெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்திய கேரளசிங்காரி மேள வாத்தியத்துடன் சுவாமி யானை மேல் பவனியும் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்திலிருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே. எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, பலாலி வீதியூடாக கோவிலை வந்தடையவுள்ளது.

பின்னர் மாலை 6 மணிக்கு இரு முடி கட்டி பதினெட்டாம் படி ஏறுதல் இரவு 8 மணிக்கு விசேட பதினெட்டாம் படி பூஜை, மண்டப பூர்த்தி என்பன இடம்பெறவுள்ளன.

அத்தோடு எதிர்வரும் தை மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மகரஜோதி பூஜையும் மறுதினம் புதன் கிழமை ஆஞ்சநேயர் உற்சவம், சுவாமிமார் கள் மாலை கழற்றுதல் ஆகியன இடம்பெறவுள்ளது. (அ-9)



சுன்னாகம் கிழக்கு மகாமாரி அம்மன் ஆலய பிரதமகுரு மயிலணி பிரம்ம ஸ்ரீ ச.சண்முகானந்த குருக்கள் தம்பதியினரின் மணிவிழாவில் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதையும் மணிவிழா தம்பதிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளுக்கு ஜனாதிபதி சார்பாக பணம் கொடுத்தது யார்?

## ஐ.தே.க.கேள்வி

2005 ஆம் ஆண்டு ஜனாதி பதித் தேர்தலின் போது, 784 மில்லியன் ரூபாவை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் எடுத்துச் சென்றது யார்? என்பதை வெளியிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத தவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 55 ஆவது வருடாந்த தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தப் பணம் எவ்வாறு, யாரால் எடுத்துச் செல்லப்பட்டது என்பதை வெளியிட முடியாவிட்டால், அதனை எதிர் காலத்தில் தாங்கள் வெளிப்படுத்துவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அந்நாள் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு சார்பான தீர்மானத்தை விடுதலைப் புலிகள் எடுக்க வேண்டும் என்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரை விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்தனர் என்ற கருத்து ஆரம்பம் முதலே இருந்து வருகிறது.

இந்தப் பணத்தை உரிமையாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான டிரான் அலஸ் ஊடாகவே பரிமாறப்பட்டதாகவும் சில தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை மையப்படுத்தியே விஜயதாஸ ராஜபக்ஷ மேற்படி சவாலை முன்வைத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் வாக்களிக்காததன் காரணத்தினாலேயே அன்றைய ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாகிஸ்தானுடன் நெருக்கத்தை ஏற்படுத்த இலங்கை இணக்கம்

வலயம் மற்றும் பூகோள நடவடிககைகளில் நெருக்கத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் மற்றும் இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் தேசிய சபையின் சபாநாயகர் சர்தார் அயேஸ் சதீக் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போதே, இது தொடர்பில் பரிமாறிக் கொணடுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

பாகிஸ்தானுடனான ஆழமான நட்பை மேலும் வலுப்படுத்தவுள்ளதாக கூறிய ஜனாதிபதி, இலங்கையில் பயங்கரவாதத்தை தோற்கடிக்க பாகிஸ்தான் உதவியமை குறித்தும் குறிப்பிட்டார்.

இரண்டு நாட்கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சபாநாயகர் கடந்த வியாழக் கிழமை இலங்கைக்கு வருகை தந்தார்.

அத்துடன் கடந்த வெள்ளிக் கிழமை அவர் இலங்கை பாராளுமன்றத்தை பார்வையிடச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கசினோ சூதாட்டத்திற்கு வரிவிலக்கு-ஐ.தே.கட்சி

(கொழும்பு)

கசினோ சூதாட்டத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கசினோ மற்றும் வரிச் சலுகை ஆகிய சொற்களை உள்ளடக்காது அரசாங்கம் இந்தச் சட்டத்திருத்தங்களை உள்ளடக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய சட்டத் திருத்தங்களின் ஊடாக இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கசினோ மற்றும் ஏனைய சூதாட்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை அரசாங்கம் வெளியிடவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

மிகவும் சூசகமான முறையில் யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் அரசாங்கம் கசினோ தொடர்பான சட்டத்தை அறிமுகம் செய்யும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது எனவும் அரசாங்கம் இவ்வாறு சட்டங்களை அமுல்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்திரும்பும் கனவு !



ஒரு உயிரினத்தின் இருப்பிடத்தை அழிப்பதும் மறுப்பதும் மிகப்பெரிய உரிமை மீறல். அது ஒரு இரக்கமற்ற கொடிய செயற்பாடும் கூட. நாம் ஒரு வீட்டைக் கட்டி முடிக்க எவ்வளவு கஷ்டப்படுகின்றோம்? ஒவ்வொரு வீடுகளும் பெரும் போராட்டங்களின் மத்தியில் கட்டியெழுப்பப்படுகின்றன. வீடு என்பது வாழ்தலின் அடையாளம்; வீடுவாழும் கனவு நிரம்பியது; வீடு பற்றிய கனவுகள் இல்லாத மனிதர்கள் இல்லை. முப்பது ஆண்டுகால யுத்தத்தினால் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வில் வீடு என்பது நிரந்தமற்றதாகிப்போனது. படையெடுப்பாளர்களால் அழிக்கப்படுவது என்பது தொடர்கதையாகிவிட்டது. நமது போராட்டம் என்பது வாழும் வீட்டிற்கானதும்கூட.

“யாழ்.வலிகாமம் வடக்கில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அண்மையில் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். புல்டோசர்கள் மக்கள் காலங்காலமாக வாழ்ந்த பூர்வீக வீடுகளை அழித்துக் கொண்டிருக்கின்றன. காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள வீடுகள் எல்லாம் உடைத்துக் குவிக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு கஷ்டப்பட்டு கட்டப்பட்ட வீடுகள். எத்தனை மனிதர்களின் இரத்தமும் கண்ணீரும் வியர்வையும் கலந்து கட்டப்பட்ட வீடுகள்? இந்த வீடுகளுக்குத் திரும்ப வேண்டும் என்று ஏங்கியே இறந்து போனவர்கள் எத்தனை பேர்? இந்த வீடுகளுக்காக இன்னும் எத்தனை பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்?

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்களைக் கடந்த பின்னரும் இலங்கை அரசு வருடங்களின் அழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் முடிவுக்கு கொண்டு வரவில்லை. யுத்தம் நடந்த சூழலிலேயே வீடுகள், நினைவிடங்கள், தொன்ம அடையாளங்கள் பலவும் அழிக்கப்பட்டன. பௌத்த சிங்கள இராணுவ அடையாளங்கள் கட்டப்படுகின்றன. வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தினர் தினந்தோறும் இரண்டுவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றனர். ஒன்று சிங்கள பௌத்த இராணுவச் சின்னங்களை நிறுவுவது, மற்றையது ஈழத்மிழர்களின் தொன்மங்களை அழிப்பது.

தமிழர் தாயகத்தை அழித்து சிங்கள பூமியாக்கும் நோக்கமே இந்த திட்டத்திற்குப் பின்னால் உள்ளது. பண்டாரவன்னியனின் சிலையை அழிப்பதும், திலீபனின் நினைவுத் தூபியை அழிப்பதும், வேலு நாச்சியாரின் சிலையைச் சேதப்படுத்துவதும், கோயில் திருவுருவங்களை அழிப்பதும் இந்த ஒரே நோக்கத்திற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவத்தினர் இந்த அழிப்புகளை எல்லாம் மேற்கொண்டபடியே இராணுவத்தின் நினைவுத் தூபிகளை அமைக்கின்றார்கள். புத்தர் சிலைகளை நடுகிறார்கள். அவற்றை நாளும் பொழுதும் பராமரித்துக்கொண்டே மறுவழத்தில் ஈழத்தமிழர் அடையாளங்களை சேதம் செய்கின்றனர். வலிகாமத்தில் வீடுகள் அழிக்கும் போது ஆனையிறவில் ஒரு யுத்த நினைவுத் தூபி நிறுவப்படுகிறது.

யுத்தம் நடக்கும்போதும், யுத்தம் ஓய்ந்திருக்கும்போதும் இராணுவம் மக்களின் வீடுகளை அழிப்பதுண்டு. யுத்தத்தின் போது மாத்திரமல்ல யுத்தம் முடிந்த இன்றைய நிலையிலும் வீடுகள் அழிக்கப்படுவதற்கு உள்ள காரணம் ஒன்றுதான். வீடுகளை அழித்தல் என்பது பண்பாட்டையும் வரலாற்றையும் அழித்தல் ஆகும். அதுவே அழித்தல் ஆகும். அதுவே நிலத்தை கையகப்படுத்தவும் உதவுகிறது. அதுவே ஒரு இனத்தையும் அழிக்க உதவுகிறது. இன்று வீடுகளுடன் சேர்ந்து நாமும் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். வலிவடக்கு வீடுகள் அழிக்கப்படுவதைப் பார்க்கும்போது தாங்க முடியாமல் நம் மனங்களும் அழிகின்றன. ஓரினத்தின் நாகரிகத்தை அழிக்கிறார்கள் என்று மனம் குமுறுகிறது.

வலி.வடக்கு, இராணுவத்தினரின் உச்சகட்ட பாதுகாப்பில் உள்ள பகுதி, இராணுவ உயர்பாதுகப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது யாவருக்கும் தெரிந்ததே. அந்தப் பகுதிக்குள் தனியான போக்குவரத்து நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அங்கு சுற்றுலாப் பயணிகள் மாத்திரம் சென்று பார்வையிட முடியும். ஆனால், அந்தப்பிரதேச மக்கள் அங்கு சென்று வசிக்கவோ பார்வையிடவோ முடியாது. அதைப்போல ஈழத் தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகளும் அங்கு செல்ல முடியாது. வடக்கு மாகாண முதலமைச்சரோ, எம்.பி. ஒருவரோ அங்கு செல்ல முடியாது. அங்கு ஈழ மக்களுக்கு எதிராகவும் சட்டவிரோதமாகவும் வீடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக அந்தப் பிரதேச மக்கள் தடுக்கப்படுகின்றனர்.

முழுக்க முழுக்க இராணுவ வாடையடிக்கும் பயங்கரப் பிரதேசமாகவே காணப்படுகிறது. தனியான ஆட்சி தான் அந்தப் பகுதியில் நடக்கிறது. அவர்கள் அங்கு எதைச் செய்ய முடியும்? இன்று அங்கிருந்த வீடுகளை அழிக்கும் காட்சி ஒன்றைத்தான் அங்கு செல்பவர்கள் காணமுடியும். புதிதாக அமைக்கப்படும் இராணுவ முகாங்களையும் இராணுவத்தினர் நடத்தும் சொகுசு விடுதிகளையும் பார்வையிட முடியும். ஆனால், மனித மனங்களை மிகவும் குற்ற உணர்வுகளுக்கு உள்ளாக்கக் கூடிய ஒரு பிரதேசமாகவே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது வலிக்கச் செய்கிறது வலி. வ டக்குப் பிரதேசம்.

எமது சனங்கள் வாழத் துடிக்கும் அந்த வீடுகளை இரக்கமற்ற சிங்கள இராணுவத்தினர் இடித்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த வருடம் அங்கு சென்றபொழுது அந்த வீடுகள் எல்லாம் பாழடைந்தபடியே இருந்தன. சில வீடுகளை இராணுவத்தினர் முகாமிட்டிருந்தார்கள். மக்கள் இல்லாத

# மீளுமா வலி. வடக்கு?


©AP

வீடுகளின் முகம் பயங்கரமானது. மக்கள் துரத்தப்பட்டு இராணுவத்தால் சூழப்பட்ட வீடுகளும் வளவுகளும் தெருக்களும் கிராமங்களும் மிக மிகப் பயங்கரமாக காட்சி அளிக்கும். அவ்வாறான பயங்கரத்துடன் அந்தப் பகுதி உறைந்து போயிருந்தது. 24 வருடங்களின் பின்னரும் அந்த வீடுகளுக்காக சனங்கள் தங்கள் தம் உயிரை பிடித்துக்கொண்டிருந்தனர்.

வலி.வடக்கு மக்கள் தமது மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தியிருந்தார்கள். அந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மக்கள் மீது தாக்குதல்களும் நடத்தப்பட்டன. பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்கும்போதுதான் இவை எல்லாம் நடந்துகொண்டிருந்தன. இத்தகைய தாக்குதல்கள் வலி.வடக்கை ஏன் அரசு அபகரித்துள்ளது என்பதை உணர்த்துகிறது. அதேவேளை வலி.வடக்கு அபகரிப்புக்கு எதிராக அந்த நிலப்பகுதியை மீட்கவும் தீராப் போராட்டத்தை நடத்த வேண்டியது எவ்வளவு அவசியமானது என்பதும் உணர்த்தப்படுகிறது.

வலிகாமம் வடக்கு, வயாவிளான், கட்டுவன் மாவிட்டபுரம், தையிட்டி, மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறை முதலிய பல கிராமங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாங்களிலும் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்றார்கள். யாழ்ப்பாண முகாம்களில் உள்ள முதிர்ந்த தாயொருவர், “நாங்கள் இறந்துபோவதற்கு முன்பாக உனது குழந்தைக்கு எனது காணியின் எல்லையை காட்ட வேண்டும்” என்று சொன்னார். நிலத்திற்கும் நிலத்தில் வாழ்ந்த முன்னவர்களுக்கும் புதிய தலைமுறைக்குமான தொடர்பு அதுதான். நிலம் என்பது எமது சந்ததிக்கானதேதான்.

23 வருடங்கள் நிலத்தை இழந்து வீடுகளை இழந்து அகதிகளாக வாழ்தல் என்பது எவ்வளவு பெரிய கொடுமை? அன்று இடம்பெயரும் பொழுது சிறுவர்களாக இருந்தவர்கள், இன்று பிள்ளைகளை உடைய பெற்றோர்களாக இருக்கிறார்கள். இருபது வருடங்களுக்கு முன்னர் பிறந்த சந்ததிக்கு அவர்களின் நிலத்தின் எல்லை தெரியாது. அவர்களின் ஊர் எப்படி இருக்கும் என்று தெரியாது. அவர்களுக்கு அவர்களின் வீடு மாத்திரமல்ல ஒரு வீடு எப்படியிருக்கும் என்றே தெரியாது. ஏனெனில் அவர்கள் பிறந்து வளர்ந்தது எல்லாமே அகதி முகாம்களில்தான். தனது பூர்வீக நிலத்தின் எல்லையை காட்டிவிட்டு இறக்க வேண்டும் என்று காத்திருப்பவர்கள் பலர்.

இன்று எல்லைகள் பறிபோய் விட்டன. தமிழர்களின் தாயகத்தின் எல்லைகள் எல்லாம் ஆக்கிரமிக்கப் படுகின்றன. வலி.வடக்கில் தற்பொழுது ஒரு காணியின் எல்லையைக் கண்டு பிடிக்க முடியாதளவில் வீடுகள், மதல்கள் என எல்லாத் தடயங்களும் அழிக்கப்படுகின்றன. அந்தக் கிராமங்களுக்கு காலம்காலமாக அழைக்கப்பட்ட பெயர்கள் இருந்து வந்தன. ஆனால், இப்பொழுது அந்தப் பெயர்கள் எதுவுமற்ற நிலையில் ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவ வலயமாகக்கப்பட்டிருக்கிறது.

துறைமுகங்களும் விமான நிலையங்களும் உள்ள இடத்தில் இராணுவப்படைமுகாம்களை அமைக்கவேண்டும் என்றால் மக்கள் எங்கு சென்று குடியமர்வது? கட்டுநாயக்காவிலும் கொழும்பு துறைமுகத்திலும் அநுராதபுரத்திலும் விமான நிலையங்கள் அமைந்திருக்கின்றன. அங்கு மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு படைமுகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? இப்படி மக்களின் வீடுகள் அழிக்கப்படுகின்றனவா? படைமுகாம்கள் அமைப்பதற்கு மக்கள் போராடும் பிரதேசத்தோடு அகதியாக வேண்டும் எனில் படை முகாம்களுக்கும் அதை நிலைநிறுத்தியுள்ள அரசுக்கும் எதிராக மக்கள் போராடுவது தவிர்க்க முடியாதது.

இலங்கை அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கையின் வெற்றிக்கு வலி.வடக்கு நல்லதொரு உதாரணம். ஈழத் தமிழர்களின் நிலத்திற்கு ஏற்பட்ட துர்க்கதியை வலி. வடக்குத்தான் இந்த உலகத்திற்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. என்ன காரணங்களைச்சொல்லியும் ஈழத்தமிழர்களின் நிலத்தை அபகரிக்கலாம் என்கிற சிங்களப் பேரினவாத நில அபகரிப்பை வலி. வடக்கு வெளிப்படுத்துகிறது. வலி.வடக்கு மக்களை இப்பொழுது வலிமக்கள் என்றே அழைக்க வேண்டும். வலி மிகுந்த மக்களாகவே அவர்கள் இருக்கிறார்கள். ஊர்திரும்ப வேண்டும் என்கிற கனவோடு முகாம்களிலும் தெருக்களிலும் அவர்கள் சந்திக்காத வலியில்லை. இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருப்பதனால் தான் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வலி.வடக்கு கடல் வளமும் நிலவளமும் நிறைந்த பிரதேசம். இராணுவத்தை நிறைப்பதன் மூலமும் முக்கியமான வளநிலங்களை உயர்பாதுகாப்பு வலயமாக்கி இராணுவத்தின் கோட்டையாக்குவதன் மூலமும் ஈழத்தமிழர்களின் நிலத்தை நிரந்தர இராணுவ வலயமாக்குவதே சிங்கள அரசின் நோக்கமாகும். இராணுவ வலயம் என்பது மக்களை வேட்டையாடும் களம். சிங்கள அரசின் இயந்திரமான சிங்கள இராணுவம் தமிழர் நிலத்தையும் தமிழ் இனத்தையும் வேட்டையாடும் நோக்கோடுதான் எல்லாவற்றையும் மேற்கொள்கிறது.

காலங்காலமாய் சந்ததி சந்ததியாய் ஆக்கிரமிப்பிற்கும் ஒடுக்கப்பட்டுக்கொண்டும் இருக்கிற மக்களுக்கு- வடக்கு கிழக்கை விட்டு சிங்கள இராணுவமே வெளியேறு என்ற கோசத்தை எழுப்பி அதற் காக அறப்போராட்டங்களைத் தொடர் வதைத் தவிர தற்போதைக்கு மக்களு க்கு வேறு வழியில்லை.

-பார்த்தீபன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையினருக்கு அனுபவரீதியான ஆலோசனைகள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய உரிமைக் குரலாக தங்களை ஒரு தலைசிறந்த தலைமையின் கீழ் அதிக பெரும்பான்மையுடன் மக்களின் ஆதரவு பெற்று நிர்வாகம் உருவாகியுள்ளது.

தங்கள் பணிகள் சிறப்பாக அமைய எமது கடந்த 50 வருட தொழில்சார் அனுபவங்களைக் கொண்டு தங்களின் கவனத்திற்காக சமர்ப்பிக்கின்றோம். நாம் வைத்தியர்களாக பதவியேற்று 15 வருடங்கள் தென்பகுதியிலும் 36 வருடங்கள் வடபகுதியிலுமாக பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றியுள்ளோம்.

இலங்கை ஒரு வறிய நாடு. அதில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட சூழ்நிலையால் எமது மக்கள் பல இன்னல்களை முகம் கொடுக்க ஏற்பட்டது.

நாங்கள் தற்சமயம் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை உலக சுகாதார நிறுவன 1980 ஆண்டு எமது நாடு போன்ற வறிய நாடுகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து (Health For all by 2000) சகலருக்கும் சுகாதாரம் 2000 ஆண்டின் என்ற ஒரு நிகழ்ச்சி திட்டத்தை வகுத்து அதை பின்பற்ற 21 விடயங்களையும் முன்வைத்தது. அதில் அடங்குபவை, (ஒரு மனிதனுக்கு தேவை யான அனைத்து விடய ங்களும் அடங்கியது)

அதில் முக்கியமானவை

- ஆரம்ப சுகாதார கவனிப்பு
- சுகாதாரக் கல்வி
- சூழல் சுகாதாரம்
- பாதுகாப்பான குடிநீர்
- தொற்றுநோய் தடுப்பும் கட்டுப்பாடும்.
- தொற்றாத தன்மையுடைய நோய் கட்டுப்பாடும், தடுப்பும்
- உள் ரீதியான பாதுகாப்பு, கட்டுக்கோப்பான குடும்பம், சமூகத்தை உருவாக்குதல்
- விபத்துக்க்ளைத் தவிர்த்தல்

இந்த தீர்மானங்களின் நோக்கங்கள் ஒரு மனித வாழ்க்கை நன்கு அமைய வழிகாட்டியாக இருந்தது. அந்த தீர்மானத்துக்கு அமைய நாம் எமது சுகாதார சேவைகளை முன்னெடுத்தோம்.

நாட்டின் பொருளாதார வளங்கள், இயற்கை வளங்கள், மனிதவளம் பயன்படுத்தி முன்னேற்றம் காணப்பட்டது. துரதிர்ஷ்டவமசமாக உள்நாட்டு யுத்த நிலை ஏற்பட்டு மேற்குறிப் பிட்ட விடயங்களின் நன்மைகள் பாதிக்கப்பட்டன.

ஆனாலும் எமது பகுதிகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் தேவை அறிந்து சேவை வழங்கிய படியால் மக்கள் தம்மை பாதுகாக்கும் வழிகளை பின்பற்றினார்கள்.

நோய் நிலை, சேவை புனர்வாழ்வு நடவடிக்கைகள் எமது பகுதியை சிறப்பாக அமைத்தது. இயன்றளவு தேவையற்ற மரணங்கள், அங்கவீனத்துவம் தவிர்க்கப் பட்டது. மக்கள் வழங்கப்பட்ட நோய் தடுப்பு, கட்டுப்பாடு, புனர்வாழ்வு முதலுதவி சேவைகள் நன்கு பயன்படுத்தினார்கள்.

தற்சமயம் இருக்கும் நிலை (மிகவும் கவலைக்குரியது)

சமூக சீர்குலைவுகள், இடம்பெயர்ந்த வாழ்க்கை, நவீன தொழில் நுட்பம் மற்றும் சுகாதார சேவையில் ஆரம்ப சுகாதார சேவையின் முக்கியத்துவம் உணரப்படாமை, குடும்பத்தினது கட்டமைப்பு சீர்குலைதல், புதிய கலாசார நடத்தை, யுத்தத்தின் பின் காணப்படும் நெருக்கிட்டு நிலை குறிப்பாக யுத்தம் நிறைவடைந்த பின் ஏற்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது.

போதை வஸ்துப் பாவனை மதுப்பாவனைக்கு அடிமையாதல், பாலியல் நோய்கள் , குறிப்பாக எயிட்ஸ் நோய், குடும்ப உளவியல் சீர்குலைவு, பாதுகாப்பின்மை, மக்களிடையே ஏற்படும் நிலை குறிப்பாக இளம் வயதினர் பாதிக்கப்படுவதை காண்கின்றோம். இவை 2009 இற்கு முன்னர் கட்டுப் பாட்டில் இருந்தவை.

இந்நிலை தொடர்வது மக்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தி நலிவற்ற சமுதாயமாக நாம் மாறுவதை தடுத்தல் வேண்டும். அத்துடன் உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் எமது இனத்தின் தனித்துவம் அழிந்து போகும்.

நாம் செய்ய வேண்டியது என்ன?

- எமது மக்களையும் இணைத்து சேவைகளை முன்னெடுத்தல் அவசியம். மக்களின் ஆதரவு இல்லாத சேவை பயன்பாடு மிகவும் குறைவு. இதில் கல்வி நடவடிக்கை சேவைக்கு முன் அவசியம்.
- சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை அந்தந்த மக்கள் பகுதிகளுக்கு விளக்கி நாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க செய்தல் வேண்டும்.
- அண்மைக் காலத்தில் சட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. அதைப் பயன்படுத்தி மக்களை வற்புறுத்தி, வாழ்விடங்கள், கடைகள் ஆகியவை எவை சட்டத்துடன் இணைந்தவர்களுடன் வீடுகள், கடை கள் தரிசித்து சட்ட நடவடிக்கை எடுப்பதால் நிலைமை சீராகாது. சட்டம் என்பது மனி தனுக்கு வழிகாட்டியாக பயன்படுத்தி கல்வி நிக ழ்ச்சிகளை நடத்தினால் அதை மக்கள் பின்பற்றுவார்கள்.
- இளைஞர்கள், யுவதிகளில் காணப்படும் நோய்கள், உளத்தாக்கம், அவர்களுக்கு விசேட நடைமுறைக்கு ஏற்ப கல்வித் திட்டங்களை உருவாக்கி அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் சேவைகளை நடைமுறைப்படுத்தல் அவசியம் 2009 இற்கு முன்னர் (உதார ணமாக) மிகவும் கஷ்டமாக யுத்த நிலையில் பாடசாலையில் இருந்து விலகும் நிலையில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு இனவிருத்தி சுகாதாரம் சம்பந்தமான கல்வி நிகழ்ச்சிகள் மிகவும் பலன் தந்துள்ளது.

சுகாதார சேவைகளை பொறுத்தமட்டில் பின் வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி நோய்களில் இருந்து காப் பாற்றுதல் அவசியம்.

- சுகாதாரக் கல்வி
- சூழல் சுக்ாதாரம்
- தொற்றும் தன்மை நோய் தடுப்பு/ கட்டுப்பாடு
- தொற்றாத் தன்மை நோய் தடுப்பு/ கட்டுப்பாடு
- உளச் சுகாதாரம், இனவிருத்தி பிரச்சினைகள், பாலியல் நோய்கள், குடும்ப உறவுகளை மேம்படுத்தல்
- விபத்துக்களை தவிர்த்தல், வன்முறை கலாசாரத்தை இல்லாமல் செய்தல்

எமது முக்கியமான மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த அதிக பணவசதி தேவையில்லை. அவை நடைமுறைப்படுத்தும் உணர்வு எல்லோருக்கும் உருவாக்க வேண்டும்.

மேலும் நோய் வந்த பின் சிகிச்சை அளிப்ப திலும் பார்க்க அது வரு முன் காப்பது சிறந்தது.

சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட சகல ஊழியர்களும் சேவை மனப்பான்மையுடன் செயலாற்றி எம்மக்களை வழி நடத்த வேண்டும்.

Dr. இ.தெய்வேந்திரன்
MBBS (Cey) Msc. (Com.Med)
யாழ். வைத்தியசாலை
திருநெல்வேலி.

# போர்க்குற்றத்தை தண்டிக்க ஐ.நா.சபை தவறக்கூடாது

## பழ.நெடுமாறன் வலியுறுத்து

ஈழத் தமிழர் படுகொலைக்குக் காரணமானவர்களை வரும் மக்களவைத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மதுரை புதூர் அருகே மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் சார்பில் நேற்றுமுன்தினம் மனித உரிமை மாநாடு நடைபெற்றது. இதில் "இலங்கையில் மனித உரிமை மீறலும், ஐக்கிய நாடுகள் சபை செயற்பாடும்" எனும் தலைப்பில் அவர் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில்,

இலங்கையில் போர் முடிந்த நிலையிலும், வடக்கு மாகாணம் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்க அச்சப்படுகின்றனர். புதிதாக தேர்வான இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவே பயிற்சி அளிக்கிறது.

இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் சீ:வி. விக்னேஸ்வரனை அங்குள்ள வடக்கு மாகாண இராணுவ ஆளுநர் முடக்கி வைக்கிறார்.

தனக்கு சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்படும் என அஞ்சியுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாண முதல் வரை சமரசம் செய்து



வருகிறார்.

முதல் உலகப் போரில் ஹிட்லரின் நாஜிப்படைகள் செய்த படுகொலையை சர்வதேச சங்கம் கண்டுகொள்ளவில்லை. இதனால் அது பின்னர் கலைக்கப்பட்டது.

ஆகவே, ஜனாதிபதியே போர்க் குற்றவாளியாக்க சர்வதேச சமூகம் முன்வராவிட்டால், ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சங்கத்தின் கதியே ஏற்படும்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் ராஜபக்சவைக் கண்டிக்கும் நிலையில், பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்ற இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரோ ராஜபக்ஷவை குனிந்து வணங்கியது சரியல்ல.

வரும் மார்ச்சில் ஜெனீவா வில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேசப் போர்க் குற்றவாளியாக அறிவித்து தீர்மானம் கொண்டுவர வேண்டும்.

ஆனால், இந்தியாவை மிகப் பெரும் சந்தையாக கருதுவதால், மேலை நாடுகள் இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட தயங்குகின்றன.

ஆகவே, ஈழத் தமிழர் படுகொலைக்குக் காரணமானவர்களை வரும் மக்களவைத் தேர்தலில் தோற்கடிப்பது அவசியம். அப்போதுதான் எதிர் காலத்தில் உலகத் தமிழர்களைப் பாதுகாக்க முடியும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈரான் மீது புதிய பொருளாதாரத்தடை தற்போதைக்கு அவசியம் இல்லை

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

**ஈரான் மீது புதிய பொருளாதார தடை விதிக்க தற்போது அவசியமில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.**

ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஜெனீவாவில் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 நாடுகளுக்கும், ஈரானுக்கு இடையே உடன்பாடு ஏற்பட்டது. மீண்டும் இது தொடர்பாக ஜனவரி மாதம் பேச்சு நடத்தவுள்ளார்கள்.இந்த உடன்பாடு காரணமாக ஈரானுக்கு எதிரான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.



ஆனால் ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதார தடை விதிக்கப் பட வேண்டும் என அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தி வருகிறார்கள்.

பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரவும் தீவிர முயற்சி செய்து வருகிறார்கள்.

இதுபோன்ற தீர்மானம் வந்தால் ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி செயல் இழக்க வைப்பார் என்று வெள்ளை மாளிகை செய்தி அதிகாரி ஜாய் கார்னே எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி ஒபாமா வோஷிங்டனில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் ஈரான் விவகாரம் குறித்து கூறியதாவது,


ஈரானுடன் செய்து கொண்ட உடன்பாடு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அதை நிறைவேற்றும் விடயத்தில் சந்தேகப்பட தேவை இல்லை.

ஆகவே ஈரான் மீது புதிய பொருளாதார தடைவிதிக்க தற்போதைக்கு அவசியம் இல்லை.

இதில் தலையிட்டால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு சவாலாக அமைந்துவிடும். பாராளுமன்றத்தில் புதிய பொருளாதார தடை விதிப்பதை தவிர்த்து தூதரக முறையில் அணுக முன்வர வேண்டும்.

உடன்பாட்டை ஈரான் மீறினால் அதன்பிறகு பொருளாதார தடை விதிப்பது குறித்து முடிவு எடுக்கலாம் என்றார். (2)

# மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை சுற்றுலாத்தலமானது



(ஜோகனஸ்பர்க்)

27 ஆண்டுகளாக மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை சுற்றுலா தலமானது. தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சமீபத்தில் தனது 95ஆவது வயதில் மரணம் அடைந்தார். கறுப்பின மக்களின் விடுதலைக் காக போராடிய அவரை வெள்ளையர் இன அரசு கைது செய்தது.பின்னர் அவர் 27 ஆண்டுகள் தனிமை சிறையில் அடைக்கப்பட்டார். அதில் 18 ஆண்டுகள் ரூபன் தீவி லுள்ள சிறையில் இருந்தார்.


அவர் மரணம் அடைந்த நிலையில் ரூபன் தீவில் 18 ஆண்டுகள் அவரை அடைத்து வைத்திருந்த சிறை தற்போது சுற்றுலா தலமாக மாறி தென்னாபிரிக்க அரசுக்கு வருமானத்தை குவித்து வருகிறது.

தென்னாபிரிக்காவுக்கு சுற் றுலா செல்லும் வெளி நாட்டினர் முத லில் கேப்டவுன் போன்ற இடங்களுக்கு செல்வதில்லை. மாறாக மிகச சிறிய நகரமான ரூபன் தீவுக்கு தான் படையெடுக்கின்றனர்.

அங்குள்ள சிறைக்கு சென்று மண்டேலா அடைக்கப்பட்டிருந்த மிகச்சிறிய அறையை மரியாதை கலந்த ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

அந்த அறையில் மண்டேலா படுக்கையாக பயன்படுத்திய ஒரு போர்வை, மேஜை, தண்ணீர் குடித்த டம்ளர், குப்பை கூடை போன் றவை நினைவு சின்னங்களாகவுள்ளன.

மண்டேலா விடுதலை ஆகி 22 ஆண்டுகளாகியும் இன்னும் அவை நினைவு சின்னங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றமை. குறிப்பிடத் தக்கது. (2)



பிலிப்பைன்ஸை தாக்கிய ஹையான் புயல் சேதங்களைப் பார்வையிட அந்நாட்டிற்குச் சென்றுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தலைநகர் மணிலாவில் ஜனாதிபதி பெனிக்னோ அகினோவை சந்திப் பதைப்படத்தில் காணலாம்.

# தெற்கு சூடானுக்கு ஒபாமா எச்சரிக்கை

(ஜீபா)

தெற்கு சூடானில் புரட்சிப் படையினரின் பிடியிலுள்ள ஜோஸ்லி மாகாண போர் நகரத்தில் மூன்று அமெரிக்க விமானங்கள் தரையிறங்க முற்பட்டவேளை குண்டுவீச்சுக்கு இலக்காகி அதில் பயணித்த 4 அமெரிக்க வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆயுத பலத்தை பயன்படுத்தி தெற்கு சூடானின் ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பவர்களின் இத் தகைய செயற்பாடுகள் அமெரிக்காவும் சர்வதேச சமூதாயமும் அளித்து வரும் நீண்டகால ஆதரவை இழக்கும் நிலைக்கு தெற்கு சூடானை தள்ளி விடும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஜூபா மற்றும் போர் பகுதிகளில் வசிக்கும் எங்கள் நாட்டினரை திரும்ப அழைத்துக் கொள்ளும் அமெரிக்காவின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு தெற்கு சூடான் தலைவர்களுக்கு உண்டு என்றும் ஒபாமா கூறியுள்ளார்.

தெற்கு சூடானில் ஜனாதிபதி சல்வா கீரின் ஆட்சியை கைப்பற்றும் நோக்கத்தில் அங்குள்ள புரட்சிப் படை களம் இறங்கியுள்ளது.

இதனால் கடந்த சில நாட்களாக இராணுவத்துக்கும் புரட்சிப்படைக்கும் இடையே நடந்து வந்த மோதல்கள் தீவிரமடைந்து உள்நாட்டுப் போர் ஆக உருவெடுத்துள்ளது.

இதற்கிடையில் தெற்கு சூடானில் உள்ள ஜொங்கோலி மாநிலத்தின் அபோக்கோ நகரில் ஐ.நா. அலுவலகத்தின் மீது சுமார் 2 ஆயிரம் நுவர் இன தீவிரவாதிகள் கடந்த புதன் கிழமை அதிரடித்தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (2)

# தமிழர்களுக்காக பிரதமராகும் வாய்ப்பை தட்டிக்கழித்தவர் கருணாநிதி

## குஷ்பு கூறுகிறார்



தமிழர்களுக்காக மூன்று முறை பிரதமராகும் வாய்ப்பை தட்டிக் கழித்தவர் கருணாநிதி என நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மக்களுக்கு விளக்கிக் கூறும் பொதுக் கூட்டம் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் சேலம் தாதகாப்பட்டியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில்நடிகை குஷ்பு கலந்து கொண்டு உரையாற்றினர்.

அப்போது அவர் கூறுகையில்,

ஏற்காடு இடைத் தேர்தலில் மன சாட்சிப்படி தி.மு.கவே வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி தங்களுக்கு தேவைப் படும்போது மட்டும் தி.மு.கவை பயன் படுத்தியது.

அந்த கட்சியினரால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம், அதனால் தான் கூட்டணியில் இருந்து வெளியேறினோம், இதை புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள்.

தமிழகத்திலுள்ள பிரச்சினைகளுக்கே தீர்வுகாண முடியாத முதல்வர், தான் தான் அடுத்த பிரதமர் என கூறிக் கொண்டிருக்கிறார்.

உண்மையிலேயே தமிழர்களின் மீது அவருக்கு அக்கறை இருந்திருந்தால் சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக வழக்கு போட்டிருக்க மாட்டார்.

கருணாநிதி தான் தமிழர்களின் தலைவர் ஆவார், அட்[illegible] முர்கள் பிரச்சினை முதல் [illegible] கப்பூர் தமிழர்கள் பிரச்சினை வரை அனைத்திற்கும் முதலில் குரல் கொடுத்தவர் அவர் தான்.

கருணாநிதியை தேடி பிரதமர் ஆகும் வாய்ப்பு பல முறை வந்தது. ஆனால் அவர் தமிழர்களின் எதிர் காலத்தை மனதில் வைத்தே அந்த வாய்ப்புகளை தட்டிக் கழித்தார்.

ஆனால் தமிழகத்தை விட்டால் வேறு எங்கும் செல்வாக்கே இல்லாத ஜெயலலிதாவோ எப்படியாவது பிரதமர் ஆகிவிட வேண்டும் என்று கனவு காண்கிறார். அவரது பிரதமர் கனவின் நோக்கமே பெங்களூர் வழக்கை முடிப்பது தான்.

ஈழத் தமிழர்களின் நலனுக் காக தீர்மானம் நிறைவேற்றுகிறேன் என்று தெரிவித்த ஜெயலலிதா, அந்த தீர்மானத்தில் இடப்பட்ட பேனா மை காய்வதற்குள் தஞ்சையில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் சுற்றுச் சுவரை இடித்து [illegible] வேடிக்கை [illegible] என்று கூறியுள்ளார். (2)

# அமெரிக்க மனிதவுரிமை அமைப்பினர் இந்திய தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்




(நியூயோர்க்)

இந்திய துணைத் தூதர் தேவயாணிக்கு ஆதரவாக நியூயோர்க்கிலுள்ள இந்திய தூதரகத்தின் முன் அமெரிக்க மனத உரிமை அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேவயாணிக்கு நீதி வழங்கக் கோரி இந்திய தூதரகத்தின் முன் அமெரிக்க மனித உரிமை அமைப்பினர் கடந்த வெள்ளிக் கிழமை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 12ஆம் திகதி அவரை, அமெரிக்க பொலிஸார் கைது செய்தனர். இதையடுத்து பிணைத் தொகையாக 1.5 கோடி ரூபாவை அந்நாட்டு நீதி மன்றத்தில் செலுத்தி தேவயாணி ஜாமீன் பெற்றார்.

இந்நிலையில் தேவயாணிக்கு நீதி வழங்கக் கோரி அமெரிக்க தொழிலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மனிதவுரிமை அமைப்பி னர் நியூயோர்க் கிலுள்ள இந்திய தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து அமெரிக்காவின், தேசிய உள்நாட்டு தொழிலாளர்கள் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில், பணிப் பெண் சங்கீதாவுக்கு தகுந்த இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மேலும், இந்த வழக் கில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சக்தியாக திரண்டு எமது உரிமைகளை வென்றெடுப்போம்

## வடமாகாணசபை உறுப்பினர் லிங்கநாதன்

(யாழ்ப்பாணம்)

**தமிழ்மக்களின் பிரச்சினைகளை தேசிய உணர்வின் ஊடாக செயற்படுத்த வேண்டுமென வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினர் க.தா.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.**

வடக்குமாகாண சபையின் அமர்வின் போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த மாகாண சபை ஏன் உருவாகியது என்பது பற்றிய ஒரு பதிவு நிச்சயமாக இங்கே பதியப்படவேண்டுமென்று எண்ணுகின்றேன். கடந்த 1987 ஆம் ஆண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாணசபை எங்களுடைய தமிழ்மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக கொண்டுவரப்பட்டது.

தமிழ்மக்களுக்கு ஒரு தீர்வு இல்லை என்று அன்றைய எமது போராட்டத்தில் ஜாம்பவான்களாக இருந்த பிரபாகரன்,உமா மகேஸ்வரன் ஆகியோர் இந்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிராகரித்தார்கள். ஆனால் இன்று காலத்தின் நிர்ப்பந்தத்தால் வடக்கு கிழக்காக இணைந்திருந்த இந்த மாகாண சபை சிறகொடிந்த நிலையில் வடமாகாணமாகப் பரிணமித்தது.

இன்று நாம் இந்த மாகாண சபையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் மிகப்பெருமையான வெற்றியுடன் இங்கு கூடியிருக்கின்றோம்.

எது எப்படியிருந்தாலும் கூட எங்களை பொறுத்தவரை ஆளுமைமிக்க சட்டநுணுக்கம் தெரிந்த நேர்மையான நல்ல முதலமைச்சரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். எங்களுடைய மக்களுக்கான அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 30 உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து எங்களுடைய மாகாணத்தின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நிச்சயமாக நாங்கள் முதலமைச்சருக்கு பக்கபலமாக இருக்க வேண்டுமென்று இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றிருக்கின்ற அரசியலமைப்பின்படி பார்த்தால் ஒரு உள்ளூராட்சி மன்றம் ஒரு மாகாண சபையின் அனுசரணை இல்லாமல் நிச்சயமாக இயங்கமுடியாது. அந்த வகையில் மாகாண சபையைப் பொறுத்தவரையில் அரசியலுக்கு அப்பால் எல்லோரும் இணைந்து முதலமைச்சரின் தலைமையில் இதனை செயற்படுத்தவேண்டும்.

அதே நேரத்தில் நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். மக்கள் பிரச்சினைகளை நாங்கள் தேசிய உணர்வின் ஊடாக செயற்படுத்த முற்படவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு மேலாக தந்தை செல்வா காலத்திலிருந்து பிரபாகரன் காலம் வரையும் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள், போராட்டங்கள் நடைபெற்றும் கூட எங்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

இன்று குறிப்பாக சிங்களத் தலைவர்கள் எங்களுக்கு ஒரு தீர்வை தருவார்கள் என்றும் நாங்கள் நம்பவில்லை.

ஏனென்றால் பெரும்பான்மை உறுப்பினர்கள் 2பேர் இருக்கிறார்கள். அவர்கள் முன்னிலையில்தான் கூறுகின்றேன் தென்னிலங்கையில் முற்போக்கான அரசியல் தலைமை ஒன்று உருவாகாத பட்சத்தில் எமது தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் இல்லை.

நாங்கள்இதற்காக போராடத்தான் வேண்டும். எதிர்வரும் காலங்களில் மக்கள் சக்தியாக திரண்டு எங்களுடைய உரிமைகளை வென்றெடுக்க நாங்கள் நிச்சயமாக போராட வேண்டும் என்றார். (அ-6)



யா/ கைதடி விக்னேஸ்வர வித்தியாலய வைரவிழாவும் நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாணசபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# மழை வீழ்ச்சி இன்மையால் நெற்பயிர்கள் நாசம்

(மல்லாவி)

முல்லை. மாவட்டத்தில் உள்ள வவுனிக் குளம் நீர்ப்பாசனக்குளத்தின் கீழ் இதுவரை நெற்செய்கையில் 2 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேல் செய்யப்பட்டுள்ள நிலையில் மழைவீழ்ச்சி இல்லாமையால், குளத்தில் நீர் வரத்தின்மையால் பயிர்கள் கருகும் நிலையில் இருப்பதால் கடன்பட்டு நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் விரக்தி நிலையில் காணப்படுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவது,

வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் 25 அடி வரை நீரை சேமிக்கக்கூடிய நிலையில் தற்போது 13 அடி வரையான நீர் மட்டுமேயுள்ளது.

இதிலும் 7 அடிக்கு கீழ் நீர்ப்பாசனத்திற்கு நீரைத்திறந்து விடமுடியாத நிலை இருப்பதால் பல ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்து நெல் விதைத்த விவசாயிகள் செய்வதறியாது தவிக்கின்றனர். இவற்றை விட துணுக்காய், மாந்தைகிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சிறு குளங்களின் கீழும் மற்றும் மானாவாரியாகவும் 2 ஆயிரம் ஏக்கருக்குமேல் நெல் விதைக்கப்பட்டுள்ள நிலையில் இவையும்



அழிவடையும் நிலையில் இருக் கின்றது. உளுந்து, கௌபி உட்பட உப உண வுச் செய்கையிலும் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள் ளதைக் காண முடிகின் றது.

ஒட்டுமொத்தமாக துணுக்காய், மாந்தை கிழக்கு பகுதிகளில் வாழும் விவசாயக் குடும்பங்கள் வங்கிகளில் பெற்ற கடனையும் தனியாரிடம் பெற்றகடனையும் மீளச் செலுத்த முடியாத அவல நிலையுடன் வாழ்வாதாரத்துக்கும் வழியின்றி தவிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

எனவே இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கும் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் முன்வரவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். [illegible]

# அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்து அரசாங்கம் கவனம்

அடுத்த வருடம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பிலும் மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான காலவரையறை சம்பந்தமாகவும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் ஒருவர் இரண்டு முறை மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்ற சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டதுடன், ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும அந்த பதவியை வகிக்கலாம் என சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந் நிலையில், ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக்காலத்தில் இரண்டாம் முறைக்கான தேர்தலை நடத்தும் காலம் பற்றி அரசியல் அமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள போதிலும் இரண்டாம் முறைக்கு பதவியேற்று பதவிக்காலம் முடியும் முன்னர் மூன்றாம் முறைக்கான தேர்தலை நடத்தலாம் என்பது பற்றி அரசியல் அமைப்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதனால் மூன்றாம் முறைக்கான தேர்தல் நடத்துவதில் பிரச்சினைகள் இருந்தால் அது பற்றி 18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை செய்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ-2)

# இந்து ஆலயங்களில் கொள்ளை சம்பவங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள இரண்டு இந்து ஆலயங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

300 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆரையம்பதி எள்ளிச்சேனை பிள்ளையார் ஆலயம் மற்றும் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம் ஆகியனவே உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விடங்களை மீட்டுத் தரக்கோரி முதலமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

**கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து, இடம் பெற்ற இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தஞ்சம் அடைந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பல குடும்பங்கள் தமது காணிகளிலும் வீடுகளிலும் இராணுவத்தினர் குடியிருப்பதால் தாம் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் மற்றும் வாடகை வீடுகளில் வசிக்கும் அவல நிலை காணப்படுவதாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர்.**

இது தொடர்பில் தெரிய வருவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரவிப் பாஞ்சான் கிராமத்தில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பொதுமக்களின் வீடுகள் உட்பட அக்கிராமத்தில் உள்ள பல வீடுகளிலும் இராணுவத்தினர் ஆக்கிரமித்து உள்ளதுடன் ஏ9 வீதியை அண்மித்துள்ள இயக்கச்சி, பளை உட்பட இத்தாவில் கிராமத்திலும் பல இடங்களில் பொதுமக்கள் வீடுகளில் இராணுவத்தினர் குடியிருக்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் பொது மக்களின் வாழ்விடங்களிலும் மற்றும் அரச கட்டடங்களிலும் இருக்கும் படையினர் நகர்ந்து செல்கின்ற முயற்சிகள் எதுவும் காணப்படவில்லை.

தற்போதும் இராணுவத்தினர் தமது படை முகாம்களை பலப்படுத்துவதுடன் வன்னியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பாரிய படை முகாம்களை அமைத்து வருகின்றனர்.

பொதுமக்களின் காணிகளில் இராணுவத்தினர் குடியிருப்பதால் அக்காணிகளில் தாம் விவசாயங்களை மேற்கொள்ள முடியாது இருப்பதுடன் தமக்கான இந்திய வீட்டுத் திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலை காணப்படுவதாகவும் தொடர்ந்தும் தாம் எதுவும் அற்ற ஏதிலிகளாக வாழ்வதாகவும் சுட்டிக்காட்டியதுடன் தமது வாழ்விடங்களை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## பருவமழை இன்மை; பயிர்கள் கருகும் நிலை


(பூநகரி)

பூநகரி பகுதி எங்கும் பருமழை பொய்த்த நிலையில் இருக்கும் பயிர்கள் கருக ஆரம்பித்த நிலையில் விவசாயிகள் பெருங்கவலை கொண்டுள்ளனர்.

தெய்வ நம்பிக்கை கொண்ட இப்பகுதி கிராமமக்கள் தமது கிராமத்து ஆலயங்களில் பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் மழை அபிஷேகத்தை செய்து வருகின்றனர்.

இரு ஆலயங்களில் 108 இளநீர் ஊற்றி விநாயகருக்கு அபிஷேகமும் நடைபெற்றுள்ளது. இந்த வாரத்தில் மழை பொழிந்தால் 25 வீதமான நெல்லையாவது பெறமுடியுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ம-84)

## அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்



(இராமநாதபுரம்)

புதுக்குடியிருப்பு சிவநகர் பிரிவு கிராம அபிவிருத்தி குழு தெரிவு கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று திங்கட்கிழமை சிவநகர் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் சிவநகர் மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-269)

## கணக்கு நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் செயலமர்வு

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் கணக்கு வைப்பு தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்றை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடாத்த ஒழுங்கு செய்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இச் செயலமர்விற்கு வளவாளராக வட மாகாண கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் இராசநாயகம் வருகைதரவுள்ளார்.


அதிபர்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கணக்கு வைப்பு தொடர்பான தெளிவின்மைகளை நீக்கி எதிர்வரும் ஆண்டில் நேர்த்தியான முறையில் கணக்கு வைப்பை சீர் செய்ய முடியும். எனவே பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலமர்வில் பங்குபற்றுவதாயின் இட ஒதுக்கீடு, தேநீர், சிற்றுண்டி ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதால் தங்கள் சம்மதத்தை செயலாளரின் 0776171397 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)




## உணவகம் தீப்பற்றியதில் பொருட்கள் எரிந்து நாசம்

### நான்கு இலட்சம் என மதிப்பீடு



(பூநகரி)

பூநகரி நகர்ப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்தினால் உணவகத்தில் இருந்த குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிபெட்டி, அலுமாரிகள், பல நூற்றுக்கணக்கான சோடாப்போத்தல்கள், தளபாடங்கள் உட்பட நான்கு இலட்சத்துக்கு மேல் அழிவு ஏற்பட்டுள்ளது.

மின் ஒழுக்கால் இவ்விபத்து நடந்ததா என சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி மின்சாரசபையினர் உட்பரிசோதனையின் பின்னர் மின் ஒழுக்கால் இச்சம்பவம் இடம் பெறவில்லையென உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக உணவக உரிமையாளரும் வலம்புரி பத்திரிகையின் முகவருமான செ.கஜேந்திரன் பூநகரி பொலிஸ் நிலையத்தில் செய்தமுறைப்பாட்டை தொடர்ந்து புலன்விசாரணை நடைபெற்று வருகிறது. (ம-84)

## வலம்புரி செய்தியையடுத்து பார்த்தீனியம் அழிக்கப்பட்டது




(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் கணேசபுரம் பிரதான வாய்க்கால் பகுதியில் பெருமளவிலான பார்த்தீனியம் காணப்பட்டது. இது தொடர்பாக வலம்புரி மூலம் பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் எவரும் கவனிக்காத நிலை காணப்பட்டது. இதனால் நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர் இதனைக் கவனத்தில் எடுத்து கடந்த 20 ஆம் திகதி இப் பார்த்தீனியங்களை அழிக்கும் நடவடிக்கை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலதிக அரசஅதிபர், விவசாயத்திணைக்களத்தினர், கமநல சேவைத் திணைக்களத்தினர், கமக்கார அமைப்புக்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மிகவும் முற்றியநிலையில் கூடுதலாகப் பரவி அழிவை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருந்த பார்த்தீனியத்தை அழித்தமை இப் பகுதி விவசாயிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. (ம-254)





பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு பூநகரி பிரதேச செயலர் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் விளையாட்டுக்கழக தலைவர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர் நடக்கும் எனில் இயல் இசை நாடகம் நடக்கும்
பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே.
– கம்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நெற்செய்கை விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்கத் தயாராகுங்கள்

உடனடியாக வருமானம் கிடைக்கவேண்டுமானால் மீன்பிடிக்க வேண்டும். மூன்று மாதத்தில் வருமானம் கிடைக்க நெல் விதைக்க வேண்டும். நூறு வருடங்களில் வருமானம் கிடைக்க வேண்டுமாயின் பனை வளர்க்க வேண்டும் என்பது சீனப்பழமொழி.

சீனப்பழமொழியின்படி நெல்விதைத்து மூன்று மாதங்களில் வருமானம் உழைத்தல் என்பது எங்கள் மண்ணில் பொய்த்து விட்டது.

மழையை நம்பி நெல்விதைத்து இருந்ததையும் இழந்தோம் என்ற கதை பெரியபுராணம் போல தொடர்கிறது.

இந்நிலையில் அநேகமான வயல்கள் விதைப்பின்றி வானம் பார்த்த பூமியாக காட்சி தர ஒரு குறிப்பிட்ட விவசாயிகள் மட்டும் நெல் விதைப்பில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு நெல் விதைப்பவர்களின் முயற்சிக்கு ஏற்ற ஊக்குவிப்புகள் இல்லை என்ற குறைகளின் மத்தியில் இயற்கையும் விவசாயிகளைத் தண்டித்து விடுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

ஒரு காலத்தில் விவசாயச் செய்கையில் கோலோச்சி நின்றவர்கள் வட மாகாணத்து விவசாயிகள்.

எனினும் போர் தந்த இடப்பெயர்வுகளும் பொன்விளையும் காணிகளை படைத்தரப்பு கபளீகரம் செய்தமையும் இயற்கையின் ஏமாற்று நாடகங்களும் விவசாயத்துறையில் இருந்து எங்கள் மக்களை கட்டாய ஓய்வெடுக்க சுற்றுநிருபம் அனுப்பியது.

விவசாயத்தை மேற்கொண்டால் பசி பட்டினி இல்லாமல் சீவியம் நடத்தலாம் என்ற நம்பிக்கைகள் அடிபட்டுப் போகுமளவில்,

விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கி அவர்களை காப்பாற்ற யாரும் முன் வராமையும் விவசாயச் செய்கையில் இருந்து முற்றுமுழுதாக விலகிக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைமையை தோற்றுவித்துள்ளது.

இதற்கு நல்ல எடுத்துக் காட்டு; எங்கள் சந்தைகளில் விற்கப்படும் சின்ன வெங்காயத்தின் விலை,

இரண்டு மாதகாலத்தை விளைவு காலமாக கொண்ட சின்ன வெங்காயம் கடந்த ஒரு வருடமாக அதிகூடிய விலையை இடம் பிடித்துள்ளது.

தற்போது 220 ரூபாய் என்ற அளவில் சின்ன வெங்காயத்தின் விற்பனை உள்ளதெனில்,

எங்கள் விவசாயிகளின் முயற்சி முற்றுமுழுதாக முடங்கிப் போயிற்று என்பதோ அதன் பொருளாகும்.

இப்போது நெற்செய்கை படுதோல்வி கண்டுவிட்டது. எங்கள் மீது கோபம் கொண்ட இயற்கை, "உங்கள் நெற் செய்கைக்கு மழைநீர் தர முடியாது" என்று அறிவித்துவிட்டது போன்ற நிலைமையால் இந்த வருடம் நெல் விளையப் போவதில்லை என்பது உறுதி.

இதன் காரணமாக நெல் விதைத்த விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இல்லையேல் அடுத்த வருடம் நெற்செய்கை செய்வதற்கு எவருமே முன்வர மாட்டார்கள்.

எனவே, நெற்செய்கைப் பாதிப்புக்காக விவசாயிகளிடம் இருந்து அறவிட்ட காப்புறுதி கட்டணத்தின் அடிப்படையில் வடபகுதி விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை காப்புறுதியால் வழங்கப்பட வேண்டும்.

இதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் காலம் கடத்தாமல் இப்போதே ஆரம்பிக்க வேண்டும்.

தேவையாயின் வயல்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு நட்டஈட்டை பதிவு செய்து கொள்ளலாம்.

# சர்வதேசத்தை ஏமாற்றவே கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கிறார் ஜனாதிபதி

## விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு



சர்வதேசத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். மாறாக, நாட்டின் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்கம் அவருக்கு கிடையாது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பிரச்சினையை தீர்க்கும் உண்மையான வேலைத் திட்டமோ நோக்கமோ அரசாங்கத்துக்கு கிடையாது. உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எழுகின்ற அழுத்தங்களை அவ்வப்போது சமாளிப்பதற்காக இவ்வாறான ஏதாவதொன்றை கூறுவது வழக்கம். அதனையே ஜனாதிபதி மீண்டும் கையாண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை நடைபெறவுள்ளது. அங்கு இலங்கைக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் எழும் நிலைமை காணப்படுகிறது. ஆதலால்தான் ஜனாதிபதி இவ்வாறானதொரு கருத்தினை வெளியிட்டுள்ளார்.

சம்பந்தனுக்கோ விக்னேஸ்வரனுக்கோ அழைப்பு விடுப்பதால் மாத்திரம் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை. மாறாக தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். அத்தோடு நடைமுறை சாத்தியமான செயற்பாட்டிற்கும் வழி வகுக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைந்த நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும் வட மாகாண மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வினை அரசாங்கம் வழங்கத் தவறியுள்ளது. அப்பகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து காணி பிரச்சினை உள்ளிட்ட பலவற்றிற்கு தீர்வளிக்காமல் மேடைகளிலும் நாடாளுமன்றத்திலும் மாத்திரம் நல்லிணக்கம் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

வடமாகாண மக்களின் சுயாதீன செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும். அவர்களின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். இல்லையேல், அம்மக்கள் மத்தியில் நம்பிக்கையினை ஏற்படுத்த முடியாது.

எனவே, வெறுமனே நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்காமல் அதனை செயல்வடிவில் காட்ட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# தென்னிலங்கை வியாபாரிகளை விரைந்து தடை செய்யுங்கள்!

## யாழ்.வணிகர்கள் வடமாகாண சபையிடம் கோரிக்கை

தென்னிலங்கை வியாபாரிகள் யாழ்.மாவட்டத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதை உடனடியாக தடுக்க வேண்டும்.

வடக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கப்பல் , விமானப் போக்குவரத்தை திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். வணிகர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர் .யாழ் . வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்கள், வங்கி முகாமையாளர்கள், வடமாகாண வணிக அமைச்சர் ப.டெனிஸ்வரனுடனான சந்திப்பு நடைபெற்றபோதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இச்சந்திப்பில் வர்த்தகர்கள் கருத்துத் தெரிவிக்கையில் , யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் வர்த்தகர்கள் பல்வேறு வகையான வருமான இழப்புக்களை சந்தித்து வருகின்றார்கள். இந்த இழப்புக்களை ஈடுசெய்ய முடியாத நிலை அரசியல் பொருளாதாரம் நிதி நிறுவனங்களின் நடைமுறைகளாலும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளாலும் ஏற்பட்டுள்ளது.


யுத்த காலத்தில் இத்தகைய இழப்புக்கள் ஏற்படவில்லை.ஆனால் தற்போது பொருளாதாரத்தை தென்னிலங்கையில் இருந்து எதிர்பார்க்கும் நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். எமது மாவட்டத்தில் வர்த்தக நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசியல் மற்றும் நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பும் தேவையாக உள்ளது. மக்களின் தொகைகளை கணக்கெடுக்காத அளவுக்கு மீறிய நிதிநிறுவனங்களின் வருகையால் மக்களின் பணம் தென்னிலங்கையை நோக்கிச் செல்கின்றது. ஒருசில அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவிகளைச் செய்யும் போது பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தாது வசதியாக உள்ளவர்களுக்கான உதவிகளை செய்கின்றமை பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலையினைத் தோற்றுவிக்கின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் சிலர் முதலீடுகளைச் செய்ய முன்வந்துள்ள போதும் கிறிஸ் பூதத்தின் வருகையால் முதலீடு செய்ய வந்தவர்களும் திரும்பிச் சென்றுள்ளார்கள்.இத்தகைய செயல்களினால் நாம் வர்த்தக ரீதியில் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றோம் என வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் எமது வர்த்தகர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதி வேண்டும். பண்டிகைக் காலங்களில் தென்னிலங்கை வர்த்தகரின் வருகையால் எமது வர்த்தகர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுமட்டுமன்றி தென்னிந்திய வியாபாரிகளின் வியாபாரத்தினாலும் எமது வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் . இத்தகைய நடவடிக்கைகளை விரைந்து தடை செய்யவேண்டும். இதற்கு வடக்கு மாகாண சபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-11)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனதின் பத்து படிகள்



உடலை இயக்குவது உயிரின் வேலை. அதனைப் பாதுகாத்து, அணு அடுக்குச் சீர் குலையாமல் தடை வரும்போது, அதை உணரும்போது மனமாக விரியும் போது, உணர்ந்த தடையை நீக்க முயல்வது உயிரின் இரண்டாவது வேலையாகும். தடையால் உணர்ச்சி ஏற்படவே அதனை போக்கப்பொருள் அல்லது சூழ்நிலை அல்லது நட்பு வேண்டும். அப்போது தேவை உருவாகிறது. உணர்ச்சியாக மாறி நிற்பதும் தேவை யாக எழுந்து நிற்பதும் உயிர்தான்.

தேவை ஏற்படவே அதைச் சமன் செய்ய முயற்சி தோன்றுகின்றது. முயற்சியின் காரணமாகச் செயல் மலர்கிறது. செயலானது இயற்கை ஒழுங்கமைப்பின்படி விளைவு தருகிறது. விளைவை உயிரானது அனுபோகம் ஆகப் பெறுகிறது. அனுபோகத்திலிருந்து இன்ன செயல் செய்தால் இன்ன விளைவு வரும். அதனால் இன்ன அனுபவத்தைப் பெறலாம் என்ற அனுபவத்தை உயிர் பெறுகிறது.

உயிர் மேற்கொள்ளும் ஆராய்ச்சி, அதன்பின் இன்னவிதமான சூழ்நிலையால் இன்னவிதமான உணர்ச்சி தோன்றியதனால் இன்னவிதமாகச் செயற்படவேண்டும் என்று ஒரு தெளிவைப் பெறுகிறது. இறுதியாக எல்லாவற்றையும் தொகுத்து ஒரு முடிவினையும் உயிர் செய்து வைத்துக்கொள்கிறது. எனவே, உயிரே உணர்ச்சி,தேவை, முயற்சி, செயல் விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற பத்துக் கட்டமாக உயர்ந்து, படர்ந்து நிற்கிறது.

எனவே உயிரினது படர்க்கை நிலை ஆற்றல்தான் மனம். ஆங்கிலத்தில் (Psychic extension of the life energy is mind) எனலாம். உடல் வரையில் இன்ப துன்ப அனுபோகங்களில் குறுகி நில்லாமல் ஆன்மா பற்றியும் இறைவனைப் பற்றியும் ஆராய உணரும் நிலையில் இந்த மனத்தையே அறிவு என்கின்றோம்.

# சபாநாயகர் தலைமையிலான குழு மாலைதீவுக்கு விஜயம்

(கொழும்பு)

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சபாநாயகர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று மாலைதீவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் சமால் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் விரைவில் மாலைதீவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அமைச்சர்களான ஏ.எச்.எம்.பெளசி, சுமேதா ஜயசேன ஆகியோரும ஐக்கிய தேசியக் கட்சியின் கயந்த கருணாதிலக, அனோமா கமகே ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அங்கம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய ஜேர்மன் விளையாட்டுத்துறை ஏற்பாட்டில் தேசிய ரீதியிலான மேசைப்பந்தாட்ட முடிவுகள்



(மானிப்பாய்)

ஆசிய ஜேர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

பெண்களிற்கான 08. 10. 12. 15. 18. 21 மற்றும் திறந்த பிரிவினரிற்கான ஒற்றையர் ஆட்டங்கள் இடம்பெற்றன.

இப் போட்டிகளின் சிறந்த வீராங்கனையாக 18 வயதுப் பிரிவு மற்றும் 21 வயதுப் பிரிவு மற்றும் திறந்த பிரிவு மூன்றிலும் சம்பியனாகிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி எஸ்.சிந்துஜா தெரிவானார்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னல்ட் தம்பதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் யாழ் மத்திய கல்லூரி விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியருமான மோகன். தேசிய மேசைப்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் செயலாளர் சந்தன பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வரும் போட்டிகள் இம் முறையே முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றன.

இப் போட்டிகளை யாழ். மற்றும் வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத் தலைவர் மோகன் தெரிவித்தார்.

**பிரிவு ரீதியான முடிவுகள்**

**8 வயதுப் பிரிவு**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் ஜனனி உமாசங்கர் பண்டாரவளை சசெக்ஸ் கல்லூரி மாணவி தரணி கவிந்தியவை 11:7. 11:3 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 8 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

**10 வயதுப் பிரிவு**


மவுண்ட்லெவேனியா பௌத்த பாடசாலையின் இமல்ஷா லக்ராந்தி மவுண்ட்லெவேனியா பௌத்த பாடசாலையின் மாணவி ஒஷாடி உமயங்கனவை 09:11. 11:8. 12:10 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று 10 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

**12 வயதுப் பிரிவு**



சிறந்த வீராங்கனையாக தெரிவான எஸ்.சிந்துஜா வெற்றிக் கிண்ணம் பெறுவதை படத்தில் காணலாம்

பண்டாரவளை சசெக்ஸ் கல்லூரி மாணவி சயூரி பவனிக மவுண்ட் லெவேனியா பௌத்த பாடசாலையின் மாணவி இமல்ஷா லக்ராந்தியை 11:7. 11:7 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 12 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.



**15 வயதுப் பிரிவு**

கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரி மாணவி அயோதா சந்தீபனி கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி மாணவி ரக்மா கம்சவை 11:8. 11:5 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 15 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

**18 வயதுப் பிரிவு**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி எஸ்.சிந்துஜா கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி மாணவி அனுஷி ஜெயலத்தை 11:8. 11:8 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 18 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

**21 வயதுப் பிரிவு**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி எஸ்.சிந்துஜா சிவகங்கா சிவபாலனை 11:4. 11:4 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 21 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

**திறந்த பிரிவு**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி எஸ்.சிந்துஜா. யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பி[illegible]துக்ஷாவை 11:9. 11:6 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று திறந்த பிரிவில் சம்பியனாகினார். (க-23)

# வதிரி டயமன்ஸ் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



(மானிப்பாய்)

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 100 ஆவது ஆண்டினை முன்னிட்டு அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியை நடத்தியது.

இதன் 3 ஆம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டி கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறுவதாக இருந்தது.

54 அணிகள் பங்கு கொண்ட இப் போட்டிகளின் 3 ஆம் இடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதுவதாக இருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கிளிநொச்சி நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியினர் வராமையால் இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து காட்சிப் போட்டியொன்று இடம்பெற்றது. இப்போட்டியில் இளவாலை ஹென்றீஸ் வி.க. அணியும் பொலிகண்டி விண்மீன் அணியும் மோதின.

இதில் இளவாலை ஹென்றீஸ் வி.க. அணி 4:0 என்னும் கோல் கணக்கில் வென்றது.

54 அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக் கழக அணிக்கு இறுதிப் போட்டியன்று 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. (க-23)

# தலைவர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் முதற் தடவையாக இலங்கை உதைபந்தாட்ட தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளது.

இதற்காக வலிகாமம் உதை பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை நாளை மறுதினம் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வலிகாமம் லீக்கின் தலைவர் அல்லது செயலாளரிடம் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வெற்றிக் கிண்ண தாச்சிப் போட்டி; மயிலிட்டி கண்ணகி வெற்றி

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி சுற்றுப்போட்டியின் காலிறுதிப்போட்டிகள் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணியும் மயிலிட்டி கலைமகள் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மயிலிட்டி கண்ணகி அணி முதல் அரைப்பாதியின் போது 9:3 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 4 புள்ளிகளை மயிலிட்டி கண்ணகி அணி பெற பதிலுக்கு 2 புள்ளிகளையே மயிலிட்டி கலைமகள் அணி பெற்றது.

இதனால் போட்டி நிறைவில் 13:5 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் மயிலிட்டி கண்ணகி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-23)

# கரீபியனை வீழ்த்தி தொடரை வென்றது நியூசிலாந்து



மூன்றாவது டெஸ்டில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.முதலிரண்டு போட்டியின் முடிவில் நியூசிலாந்து அணி 1-0 என முன்னிலையில் இருந்தது.இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் ஹாமில்டனில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 367 ஓட்டங்கள். நியூசிலாந்து 349 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 103 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் நியூசிலாந்து அணிக்கு 122 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்திருந்தது.நான்காவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணிக்கு புல்டன்(10) ஏமாற்றினார்.

பின் இணைந்த ரூதர்போர்டு. வில்லியம்சன் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. வீராச்சாமி பெருமாள் சுழலில் அரைசதம் கடந்த வில்லியம்சன்(56) ஆட்டமிழந்தார்.எதிர்முனையில் இருந்த புல்டன் தொடர்ந்து ஓட்டங்களை எடுக்க. நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட்டுக்கு 124 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 [illegible] நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியின் வீரர் [illegible]. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டு பிளசிஸ், டி வில்லியர்ஸ் சதம்

# பரபரப்பான வொண்டரஸ் டெஸ்ட் சமனிலையானது

டு பிளசிஸ், ஏபி டி வில்லியர்ஸின் உறுதிமிக்க அபார சதங்களினால் இந்தியாவுக்கு எதிரான பரபரப்பான வொண்டரஸ் டெஸ்ட் சமனிலையில்



டு பிளசிஸ்

முடிபடைந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அங்கு 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டி ஜொகன்னஸ்பேர்க் நியூ வொண்டரஸ் அரங்கில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக 103 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அதிகபட்சமாக விராட் ஹோலி 119 ஓட்டங்களை எடுத்தார்.

தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் பிலாண்டர் 4, மோர்கல் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின் பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இந்திய வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 75.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அணித் தலைவர் கிரேம் ஸ்மித் 68, சகலதுறை வீரர் வேர்ணன் பிலாண்டர் 59 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக சகீர் கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது 2-வது இன்னிங்ஸை 36 ஓட்டங்கள் என்ற முன்னிலையில் ஆரம்பித்த இந்திய அணி, 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களை எடுத்திருந்தது.

4-ம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 120.4 ஓவர்களைச் சந்தித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 421 ஓட்டங்களை எடுத்து 457 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

துடுப்பாட்டத்தில் புஜாரா 153, விராட் ஹோலி 96 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக கலிஸ், பிலாண்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

458 என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 4-ம் ஆட்டநேர முடிவில் (நேற்று முன்தினம்) 2 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று 5-வது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, டு பிளசிஸ், ஏபி.டி. வில்லியர்ஸின் அபார சதங்களின் உதவியினால் சாதனை வெற்றியை நெருங்கிச் சென்ற வேளையில் இக்கட்டான நேரங்களில் இருவரின் ஆட்டமிழப்பு தென்னாபிரிக்காவின் சாதனை வெற்றியை தகர்த்து போட்டியை சமனிலையாக்கியது.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 136 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக டு பிளசிஸ் 134, ஏபி.டி.வில்லியர்ஸ் 103, அல்விரோ பீற்றர்சன் 76 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக மொஹமட் ஷமி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக இந்திய அணி சார்பாக சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய விராட் ஹோலி தெரிவானார்.

இரு அணிகளுக்கு இடையிலான 2-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி வரும் 26-ம் திகதி டேர்பனில் ஆரம்பமாகிறது.



ஏபி டி வில்லியர்ஸ்

## இந்தியாவிடமிருந்து...

கான பேச்சுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த 99 எண்ணெய் சேகரிப்புக் குதங்களும் இலங்கையில் இயங்கும் இந்திய எண்ணெய் வள நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்துக்கு அப்போது தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் 35 ஆண்டுகால குத்தகைக்கு வருடம் தோறும் 100,000 அமெரிக்க டொலர்கள் கட்டணத்துடன் இலங்கையில் இயங்கும் குறிப்பிட்ட இந்திய எண்ணெய் வள நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மீது குற்றம் சுமத்தியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்களை மீளப்பெற்று, அரசாங்க சொத்தாக மாற்றுவதற்கான பேச்சுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக 2014இம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாத முடிவில் இலங்கையின் நிதியமைச்சர் என்ற முறையில் பதிலளித்துப் பேசிய போது தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மான த்துக்கு ஆதரவாக இந்தியா வாக்க ளித்திருந்த நிலையில், குறிப்பிட்ட இந்திய எண்ணெய் வள நிறுவனத்தால் பயன்படுத்தப்படாத எண்ணெய சேகரிப்புக் குதங்களை மீளப் பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்களை இந்திய எண்ணெய் வள நிறுவனம் பயன்படுத்தாவிட்டால், அவற்றை தாங்கள் பயன்படுத்த முடியும் என மார்ச் மாதம் இலங்கையின் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அறிவித்திருந்தார்.

அத்துடன், ஐ.நா மனிதவுரிமைகள ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்ட இலங்கையின் மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமைக்கும், அரசாங்கத்தின் இந்த முடிவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், கொழும்பில் கடந்த மாதம் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணித்ததைத் தொடர்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மேலும் விரிசலடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தொடர் பட்ஜெட்...

உள்ளூராட்சி சபைகளிலும் ஏற்கெனவே வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகள் ஆளுங்கட்சி உறுப்பினர்களாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறான 15-க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளில் இம்முறை வரவுசெலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கட்சியும் கடும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

அதேபோல், வடக்கு மாகாணத்தில் வல்வெட்டித்துறை நகரசபை உட்பட இதுவரை மூன்று உள்ளூராட்சி சபைகளில் வரவுசெலவுத் திட்டம் எதிர் கட்சிகளின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலும் காரைதீவு, நாவிதன் வெளி, வெருகல் மற்றும் ஆலையடி வேம்பு ஆகிய உள்ளூராட்சி சபைகளிலும் வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்படுமானால் தோற்கடிக்கப்படும் நிலையே தோன்றியுள்ளது.

இலங்கையில் உள்ளூராட்சி சபை சட்ட வழக்கத்தின்படி, வரவு செலவுத் திட்ட த்தை நிறைவேற்றுவதற்காக உள்ளூராட்சி சபையின் தலைவர் அதனை இரண்டு தடவைகள் முன்வைக்க முடியும். இரண்டாவது தடவை தோற்கடிக்கப்பட்டால் தலைவர் பதவி இழக்க நேரிடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிகளுக்குள் நிலவும் முரண்பாடுகளே இம்முறை வரவுசெலவுத் திட்ட தோற்கடிப்புகளுக்கு பிரதான காரணம் என்றும் கூறப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்திற்கு சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச செயலாளர் மாவை சேனாதிராஜா, "ஏற்கெனவே நிறைவேற்ற முடியாமல் போன உள்ளூராட்சி சபைகளில் வரவுசெலவுத் திட்டம் மீண்டும் நிறைவேற்றப்படும்" என்று நம்பிக்கை வெளியிட்டார்.

தமது கட்சி அதிகாரத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் வரவு செலவுத் திட்டம் தோல்வி அடைந்தால் அதற்கு காரணமான கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதன் மூலம் சம்மந்தப்பட்ட உறுப்பினர்கள் தமது பதவியை இழக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## தமிழ் இனப்படு...

எல்லைகள் வகுக்கப்பட்டு, மரபுகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால், தமிழ் இனத்திற்கு செய்த துரோகத்திற்கும் இனப்படுகொலையின் உடந்தைக்கும் தமிழர் வரலாற்றில் பிரணாப் முகர்ஜிக்கு மன்னிப்பே கிடையாது.

வரலாற்றில் மன்னிக்க முடியாத மகாபாதகத் தமிழ் இனப்படுகொலையை, சிங்களப் பேரினவாத ராஜபக்ஷ அரசு செய்வதற்கு முழுக்க முழுக்க உடந்தையாகச் செயல்பட்ட குற்றவாளிதான் காங்கிரஸ் தலைமை தாங்கும் இந்திய அரசாகும்.

இந்தக் கொடுங்குற்றத்தில் இந்தியாவின் இராணுவ அமைச்சராகவும், வெளிவிவகாரத்துறை அமைச்சராகவும் முக்கியப் பங்கு வகித்த பொறுப்பாளிதான் பிரணாப் முகர்ஜி ஆவார்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில், பலாலி விமான தளத்தை இந்திய விமானப்படையைப் பயன்படுத்தி, இந்திய அரசின் பொருட்செலவில் பழுது பார்த்துக் கொடுத்த பாவத்தை பிரணாப் முகர்ஜி செய்ததால் தான், அந்த விமான தளத்தில் இருந்து இஸ்ரேல் உள்ளிட்ட வெளிநாடுகளில் வாங்கிய போர் விமானங்களை சிங்கள அரசு பயன்படுத்தி செஞ்சோலையில் குண்டு வீசி 61 சின்னஞ்சிறுமிகளைக் கொடூரமாகக் கொலை செய்தது.

இந்திய விமானப்படை தந்த ரேடார்களின் உதவியால்தான் தமிழர் பகுதிகளில் குண்டு வீச்சு நடத்தி, இலட்சக்கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்தது. உலகத்தில் பல நாடுகள் போர் நிறுத்தம் கோரியபோது, தமிழ்நாட்டுக்கு வந்த பிரணாப் முகர்ஜி, 'போர் நிறுத்தம் கேட்பது எங்கள் வேலை அல்ல' என்று ஆணவத்தோடு சொன்னார்.

மூன்று லட்சத்து எழுபதாயிரம் தமிழர்கள் கொலைக்களத்துக்குள் சிக்கி தவித்தபோது, எழுபதாயிரம் தமிழர்கள்தான் பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்றும், அவர்களையும் பாதுகாப்பாக சிங்கள அரசு நடத்தும் என்றும், 2009 பெப்ரவரி 18 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தில் அப்பட்டமான பொய்யைச் சொன்னவரும் இவர்தான்.

இன்று ஜனாதிபதி பதவி நாற்காலியில் உள்ள அன்றைய பிரணாப் முகர்ஜி தமிழ்நாட்டுக்கு வந்தபோது, அவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்று கருதி, தமிழக அரசு காவல் துறையை ஏவிவிட்டு மாணவர்களையும், தமிழ் உணர்வாளர்களையும் டிசம்பர் 19 ஆம் திகதி நள்ளிரவில் கைது செய்து, அடக்குமுறையை ஏவியது.

இந்த அக்கிரமம் தமிழ்நாட்டில் ஒரு பாசிச வெறியாட்டத்தின் தொடக்கமாகவே கருதி, இதற்குக் கண்டனம் தெரிவிக்கிறேன்.

பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்குமீன் வேலையை ஈழத்தமிழர் பிரச்சினையில அண்ணா தி.மு.க.அரசு நடத்துகிறது.

மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து இந்த அராஜகத்தில் ஈடுபட்ட துணை ஆணையரும் சம்பந்தப்பட்ட காவலர்களும் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட வேண்டும் என்று வைகோ கூறியுள்ளார். (செ-4)

## புலியை தேசிய...

ஏற்றுவதை தடை செய்ய விக்னேஸ்வரன் தீர்மானித்துள்ளார்.

இந்த தீர்மானம் தொடர்பில் அவர் தனது சகாக்களுக்கும் ஏற்கெனவே அறிவித்து விட்டார். இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கும வாள் ஏந்திய சிங்கம் விக்னேஸ்வரனுக்கு பிரச்சினையாக உள்ளது.

இலங்கையின் தேசியக் கொடிக்கு பதிலாக வடக்கு கிழக்கில் ஈழக்கொடி யேற்றப்பட்ட சந்தர்ப்பங்கள அன்று இருந்தன. ஈழக் கொடியை ஏற்றும் போது அதற்கான தேசிய கீதம் இருந்தது.

2002 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர் ஈழக் கொடிக்கும் அதன் தேசிய கீதத்திற்கும் முக்கிய இடம் கிடைத்தது. வடக்கு கிழக்கில் உள்ள அரச பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் பொழுது ஈழக் கொடியே பறக்கவிடப்பட்டது. ஈழ தேசியகீதமே பாடப்பட்டது.

இலங்கையில் அன்று இரண்டு சக்திகள் இருந்தன. இன்று அரசாங்கத்தை தவிர வேறு சக்திகள் கிடையாது. எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் தற்பொழுது அப்படியான சக்தியை கட்டியெழுப்பி வருகிறார்.

வடக்கு மாகாணத்தில் இலங்கை தேசியக் கொடியை தடை செய்யும் அதிகாரத்தை விக்னேஸ்வரனுக்கு யார் கொடுத்தார் என்பது கேள்வியாகும்.

இலங்கையின் தேசியக் கொடியை அவமதிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இலங்கையின் தேசியக் கொடிக்கு அவமதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று நாட்டின் அரசியல் சட்டத்தில 11 இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இப்படியான நிலையில் இலங்கையின் தேசியக் கொடியை நீக்க நடவடிக்கை எடுத்திருக்கும் முதலமைச்சருக்கு தண்டனை வழங்க நாட்டின் அரசியல் சட்டத்திலும் இலங்கை குற்றவியல் சட்டத்திலும் இடம் இருக்கின்றது என்பது சந்தேகமில்லை.

கோயில் ஒன்றின் பூசகர் கோயிலுக்குள் எந்த நாடகத்தை ஆடவும் இடமிருந்தாலும் இலங்கையின் ஒரு மாகாண சபையின் முதலமைச்சர் ஒருவருக்கு நாட்டின் சட்டத் திட்டங்களையும் சம்பிரதாயங்களை மாற்றும் வல்லமை இருக்கின்றது என்பது தெளிவாகிறது.

இலங்கையின் தேசியக் கொடிக்கு அவமதிப்பை ஏற்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்றால், வடக்கு மாகாணத்தில் தேசியக் கொடியை நீக்க வேண்டும் என கூறும் விக்னேஸ்வரனுக்கு தண்டனை வழங்கப்படாதது கேள்விக்குரியது.

சிங்கம் இருப்பதன் காரணமாகவே விக்னேஸ்வரன் தேசியக் கொடியை எதிர்க்கின்றார். சிங்கம் என்பது சிங்கள மக்களை மட்டும் பிரதிநிதித்துவம் செய்கிறது என விக்னேஸ்வரன் காண்கின்றார்.

சிங்கக் கொடியின் முன்னால் அதன் நிழலில் சத்தியப் பிரமாணம் செய்த விக்னேஸ்வரனுக்கு இன்று சிங்கக் கொடி அருவருப்பாக மாறியுள்ளது. சிங்கக் கொடிக்கு பதிலாக புலி அடங்கிய தேசியக் கொடியை அவர் எதிர்பார்க்கின்றார்.

எனினும் விக்னேஸ்வரனின் நோக்கங்களில் மாற்றம் உள்ளது. வடக்கு மாகாணத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இருந்து சிங்கள பொலிஸாரையும் இராணுவத்தினரையும் அப்புறப்படுத்த வேண்டும் எனக் கூறும் விக்னேஸ்வரன், இராணுவ அதிகாரியான ஆளுநரை நீக்குவதற்கான பின்னணியை உருவாக்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தை முழுமையான தமிழ் மாகாணமாக மாற்ற முயற்சிக்கும் விக்னேஸ்வரன், நிறைவேற்ற துடிப்பது யாருடைய நோக்கத்தை என்பது தெளிவாகியுள்ளது.

புலி காட்டை மாற்றிக் கொண்டாலும் அதன் உடலில் இருக்கும் வரி மாறாது. இந்த கதை விக்னேஸ்வரனுக்கு பொதுவாகியுள்ளது என திவயின குறிப்பிட்டுள்ளது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Beacon கல்வி நிறுவனத்தின் வாழ்த்துக்கள்**



எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று 3A சித்திகளை வணிகத்துறையில் பெற்று யாழ். மாவட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்ற செல்வி **ஜெயக்குமார் நிதுஷா** வைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மாணவியை சரியான முறையில் வழிப்படுத்திய கணக்கீடு ஆசிரியர் R. சுகிர்தன், பொருளியல் ஆசிரியர் K. பிரதீபன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வெலிங்டன் சந்தி, யாழ் நகர். (C-5965) Beacon கல்வி நிறுவனம்

**வேலைவாய்ப்பு**

அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு...

**கோலாசிற்றி** 021 320 2787 தொழில் வங்கி

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)

இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

**VACANCY**

எதிர் காலத்தை வெற்றிகொள்ள நிரந்தரத் தொழில் சர்வதேச முன்னணி நிறுவனத்தில் NEW OFFICE 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய இலங்கையர்கள் 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு : பயிற்சி, தங்குமிட வசதிகள் இலவசம். பயிற்சியின் போது 18,000/- பின் 35,000/- +

அழைக்கவும் : (5133)

0777981471, 0772302795, 0775566224

## அரச ஆதரவில்...

படையினர் உள்நோக்கங்களின் அடிப்படையில் வடக்கில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளனர்.

எங்களது காணிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், தொழில் வாய்ப்புக்கள் தட்டிப் பறிக்கப்படுகின்றன. யுத்தம் காரணமாக கணவரை இழந்த பெண்கள் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர். எவ்வித உள்நோக்கமும் இல்லாவிட்டால் வடக்கில் காவல்துறையினரை அதிகளவில் ஈடுபடுத்தி, இராணுவத்தினரை ஏன் அரசாங்கத்தினால் குறைக்க முடியாது.

தெற்கைச் சேர்ந்த மனிதாபிமான சாதாரண சிங்கள மக்கள் இது குறித்து கேள்வி எழுப்ப வேண்டும்

தமிழ் பேசும் தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல.

எனினும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள மயமாக்கல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## பச்சிளம்...

தெரிய வருவதாவது: குறித்த காணியில் நேற்று மாலை பெண்ணொருவரினால் குழியொன்று தோண்டப்பட்டு அங்கு ஏதோவொன்று புதைக்கப்பட்டதை அவதானித்த இளைஞர் குழுவொன்று அங்கிருந்து அந்தப் பெண் அகன்றதையடுத்து அந்தக் குழியை தோண்டிப் பார்த்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த குழியில் குழந்தையொன்றின் கை வெளிப்பட்டதையடுத்து அதிர்ச்சியடைந்த அந்த இளைஞர் குழுவினர் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதோடு நீதவானுக்கும் இது தொடர்பில் அறிவித்தனர். அத்தோடு பொலிஸார் பாதுகாப்பு பணியிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த குழந்தையின் சடலம் இன்று காலை யாழ். நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் பொலிஸாரினால் மீட்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6-4)

**French Classes பிரெஞ் வகுப்புகள்**



French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள்; விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும் 61, Kachcheri-Nallur Road, Jaffna

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக் கட்டடம்)

**மிதுஸ் ஜூவல்லறி**

**MITHUS JEWELLERY**

உரிமையாளர் : சுதன்

Point Pedro Road, Nelliady.

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

T.P : 0773286073, 021 5686029 (C-5966)

**NEW SCIENCE WORLD**

**VICTORY MUST**

Navalar road junction , Brown road , Jaffna.

Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

For 2013A/L...... Monday - Friday

Day Classes

Physics : R.Kugen, R.Kumaran

Chemistry : Dias, S.Sivakumar

Biology : S.Ponthivakaran, V.Umashankar

(சி-5958)

இன்று புதிய பிரிவு ஆரம்பம் 23.12.2013 திங்கள் நேரம்:-7.30

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY JAFFNA

**2016 A/L** கணித உயிரியல் பிரிவு

**PHYSICS**

திரு. S. சோதிலிங்கம்

திரு. G. பிரபா

திரு. N. கபிலன்

திரு. K. செல்வன்

**CHEMISTRY**

திரு. K. சிவத்திரன்

திரு. N. மகேஸ்வரன்

திரு. G. BENO

திரு. T. சுசாந்தன்

**BIOLOGY**

வழமையான ஆசிரியர்

திரு. T. தம்பிராஜா

திரு. T. கெங்காதரன்

**COM. MATHS**

திரு. S. செந்தில்ராஜ்

திரு. S. செந்தில் நாதன்

திரு. S. சிவகரன்

ஆரம்பம் : 28.12.2013

SAT 8.30 A.M (5967)

**A/L 2016**

**Physics**

**ICT**

**Technology Subjects**

பதிவுகளுக்கு முந்துங்கள்

**பிரத்தியேக வகுப்புக்கள்**

- மல்ரி மீடியா மூலமான விரிவுரைகள்
- அதி நவீன வகுப்பறைகள்
- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்
- ஒரு பிரிவில் 25 மாணவர்கள் மட்டுமே

**Mind vision**

Technology CAMPUS

மணிக்கூட்டு ஒழுங்கை யாழ்ப்பாணம்

உப தபாலகம் அருகில் கோண்டாவில்

077 933 93 53

**டிஜிட்டல் இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்**

Digital

பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிப்பட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-5962)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 021 753 8330, 077 151 101

## அறிவித்தலம்

2013 ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த சைவக் குருமாரின் பிள்ளைகள் 26.12.2013 வியாழக்கிழமைக்கு முன்னர் 076 6166325 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (5132)

**Beacon கல்வி நிறுவனம்**

வெலிங்டன் சந்தி, யாழ்நகர்.

**வர்த்தகப் பிரிவு Day Class**

ஆரம்பம் : 25-12-2013 காலை 8 மணி

கணக்கீடு : R. சுகிர்தன் (B.Com)

பொருளியல் : K. பிரதீபன் (B.B.A)

வணிகக்கல்வி : P. கோகிலன் (HNDA)

ஆரம்ப அலகிலிருந்து துரித மீட்டல் நடைபெறும். (C-5968)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org